விலை: 40.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 131 வள்ளுவர் ஆண்டு 2053 சித்திரை 16 வெள்ளிக்கிழமை (29.04.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கலயாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல. 144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=




# நாடு செயலிழந்தது

## என்றுமில்லாதவாறு அரசுக்கு எதிராக பாரிய போராட்டம்



(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டா தலைமையிலான அரசை பதவி விலகக் கோரியும் நாட்டின் பொருளாதார நெருக்கடியை கண்டித்தும் நேற்று பாரிய தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டதால் நாடு முற்றாக செயலிழந்ததோடு நாட்டின் இயல்பு நடவடிக்கை பாதிப்படைந்தது. (15ஆம் பக்கம் பார்க்க)

## ராஜபக்ஷவினால் வங்குரோத்து நிலைக்கு நாடு சென்றுள்ளது

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(கொழும்பு)

ராஜபக்ஷ குடும்பம் 30 மாதங்களில் நாட்டை வங்குரோத்து நிலைக்கு இட்டுச்சென்றுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றம் சாட்டினார்.

தேசிய வளங்களும் தேசிய சொத்துக்களும் திருடப்பட்டமையின் காரணமாகவே நாடு வங்குரோத்து நிலையை அடைந்துள்ளதாக சஜித் பிரேமதாச குறிப்பிட்டார். 15

## ரூ. 550 கோடி பெறுமதியான மருத்துவப் பொருட்கள் இலங்கை வந்தடைந்தன

(கொழும்பு)

சுமார் 550 கோடி ரூபாய் (1.6 மில்லியன் அமெரிக்க டொலர்கள்) பெறுமதியான மருத்துவப் பொருட்கள் இலங்கையை வந்தடைந்துள்ளன.

குறித்த 1.6 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான மருத்துவப் பொருட்களை இந்தோனே 15

## புதுக்காட்டில் விபத்து ஒருவர் உயிரிழப்பு



(பளை)

பளை பொலிஸ் பிரிவிற்குட் பட்ட புதுக்காட்டு சந்தி பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் பலியாகியுள்ளார்.

குறித்த சம்பவமானது நேற்று முற்ப 15

## அனைத்து நெருக்கடிகளுக்கும் ஒரு மாதத்திற்குள் தீர்வு

### நிதியமைச்சர் அலி சப்ரி வாக்குறுதி



(கொழும்பு)

தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு ஒரு மாதத்திற்குள் தீர்வினை பெற்றுக்கொள்ள முடியும் என்று நிதி 15

### நெருக்கடி தீரும்வரை

## நகரங்களுக்கு மட்டுமே எரிவாயு விநியோகம்

(கொழும்பு)

நாடு பொருளாதார நெருக்கடியிலிருந்து மீளும்வரை நகரங்கள் மற்றும் அத்தியாவசிய தேவைகளுக்கு மாத்திரம் சமையல் எரிவாயுவை விநியோகிக்க தீர்மானித்துள்ளதாக லிட்ரோ நிறுவனத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். 15

## எரிபொருளுக்காக வரிசையில் நின்ற மேலும் ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

களுத்துறைப் பகுதியில் எரிபொருளுக்காக வரிசையில் நின்ற நபர் ஒருவர் நேற்று மதியம் 15

### ரம்புக்கனை துப்பாக்கி பிரயோகம்

## பொலிஸ் அத்தியட்சகர் உட்பட நால்வர் கைது

(கொழும்பு)

ரம்புக்கனையில் அண்மையில் துப்பாக்கி பிரயோகம் நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் கேகாலை பிரதேசத்திற்கு பொறுப்பான முன்னாள் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கே.பி. கீர்த்திரத்ன குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார். 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மு/ குமுழமுனை மகா வித்தியாலயம்

### பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

காலம் : 14.05.2022 (சனிக்கிழமை) மு.ப 9.30

இடம் : பாடசாலை பிரார்த்தனை மண்டபம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர்
மு/ குமுழமுனை ம.வி

(11193)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் பகுதித் தலைவர், கணக்கீட்டு பாட ஆசான் **திரு. இ.தயாகரன்** அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி இராசேஸ்வரி இலங்கநாதன்



அவர்கள் 26.04.2022 அன்று இறைபதம் அடைந்துவிட்டார்.
அன்னாரின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் நலன்புரிச் சங்கம் - யா/இணுவில் மத்திய கல்லூரி**

(9583)

## இரண்டாம் ஆண்டு நினைவுகளோடு...

### தாமோதரம்பிள்ளை இராசேந்திரம்



மலர்வு 26.10.1961
உதிர்வு 22.04.2020
திதி:சதுர்த்தசி

தேடுகின்றோம் நால்திசையும்
உம் நிழலை நாமிங்கு

அன்பிற்கும் அரவணைப்பிற்கும் ஆதரவிற்கும்
ஏங்கித் தவிக்கின்றோம் அப்பா.

எம்முயர்வுகளை பார்த்து மகிழ அப்பாவில்லாப்
பிள்ளைகளானோம்.

மறு ஜென்மம் இருந்துவிட்டால் ஓடி வாருங்கள்
உமைத் தாங்க நாமுள்ளோம்.

சொல்லியழ வார்த்தையில்லை
சோர்வுற்றோம் நீங்களின்றி

இரண்டு வருடமல்ல எப்பிறவியிலும்
உமை மறவோம் அப்பாவே.

சாஸ்திரியார் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

(9587)

தகவல்
குடும்பத்தினர்

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் இசைமணி

### வல்லிபுரம் செல்லத்துரை

(கலாபூசணம்,
வருகை விரிவுரையாளர் -
இராமநாதன் நுண்கலைப்பீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்,
மருதனார்மடம்)

தோற்றம் 27.05.1935
மறைவு 21.04.2020

திதி:29.04.2022

தகவல்: குடும்பத்தினர்
அச்சுவேலி மேற்கு,
அச்சுவேலி.

(9582)

## மரண அறிவித்தல்

### மருதன் சிவலிங்கம்



கட்டுவன் மேற்கு, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் ஏ9 வீதி, நாவற்குழியை வசிப்பிடமாகவும் கொண்ட மருதன் சிவலிங்கம் நேற்று (28.04.2022) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மருதன் - சோதி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நாகர் - முத்து தம்பதியரின் அன்பு மருமகனும் தவமணியின் பாசமிகு கணவரும் ஜெயகௌரி, ஜெயசிலன் (கனடா), ஜெயரஞ்சினி, ஜெயமாலினி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயந்தி (கனடா), சாந்தகுமார் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான மாணிக்கம், சுந்தரம், வல்லிபுரம், குண்டுமணி மற்றும் பூமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான கோவிந்து, கதிரேசு (ஓய்வுபெற்ற கிராமசேவகர், முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர்), பூமணி, தர்மலிங்கம், பூங்கினி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் பிரஜீத் (கனடா), சாஜீத் (கனடா), ரோஜீத் (கனடா), சரத்மால் (நெதர்லாந்து) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக் கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (29.04.2022) வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் நடைபெற்று நாவற்குழி பொது மயானத்தில் தகனக் கிரியைகள் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஏ9 வீதி, நாவற்குழி.
தொடர்புகளுக்கு: 076 266 4937, 077 606 2944 (11195)

தகவல்
குடும்பத்தினர்

## பளை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

மேற்படி சங்கத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்கான தகைமையுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பதவி குறியீட்டு இல : விற்பனை உதவியாளர் 308/17**

**சம்பள அளவுத்திட்டம் : 14,725 - 115 X 10 -130X 10 - 17,175.00**

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

அ. கூட்டுறவு ஊழியர் கனிஷ்ட தராதரப்பத்திரம்/08 ஆம் தர கல்விச் சான்றிதழ்.

**விண்ணப்ப முடிவுத் திகதி : 08.05.2022**

**நிபந்தனைகள்**

01. பதவிக்கேற்ப பிணைப்பணம் அறவிடப்படும்.
02. வயதெல்லை 18 தொடக்கம் 45 வரை (கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு விலக்களிக்கப்பட்டது)
03. அடிப்படைச் சம்பளத்திற்கு மேலதிகமாக கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவுப்படியும் வழங்கப்படும்.
04. கூட்டுறவுச் சங்கங்களில் தற்பொழுது கடமையாற்றுபவர்கள் சங்கத்தின் ஊடாக சிபார்சு செய்து விண்ணப்பித்தல் வேண்டும்.
05. சங்க எல்லைப் பரப்புக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
06. விண்ணப்பங்கள் முழுப்பெயர், முகவரி, தேசிய அ.அ.இல, பிறந்த திகதி, தகைமைகள், அனுபவம் என்பவை உள்ளடங்கலாக சுயமாகத் தயாரிக்கப்பட்டு கல்விச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், அனுபவச் சான்றிதழ் பிரதிகளை இணைத்து அனுப்பி வைத்தல் வேண்டும்.
07. விண்ணப்பங்களை ஏற்கவோ, நிராகரிக்கவோ நெறியாளர் குழுவுக்கு உரிமையுண்டு.
08. விண்ணப்பங்கள் **தலைவர், பளை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கண்டி வீதி, பளை** எனும் முகவரிக்கு எதிர்வரும் 08.05.2022 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.
09. தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர், குறியீட்டு இலக்கம் என்பன குறிப்பிடப்படல் வேண்டும்.

28.04.2022

க.இராசதுரை
தலைவர்,
பளை.ப.தெ.வ.அ.கூ.சங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஆர்ப்பாட்டங்களால் அதிர்ந்தது இலங்கை




யாழ்.பல்கலைக்கழகத்தில்



கண்டியில்...




இலங்கை வங்கி ஊழியர் சங்கம் யாழில் ஆர்ப்பாட்டம்




மட்டக்களப்பில்...




சீன மொழிப் பதாகைகளுடன் வவுனியாவில் ஆர்ப்பாட்டம்



திருகோணமலையில்...



தங்காலையில்...



புத்தளத்தில் சுழற்சி முறையில் சத்தியாக்கிரகம்



நுவரெலியாவில்...



பதுளையில்...








3 ஆவது நாளாக தொடரும் ஐக்கிய மக்கள் சக்தியின் பேரணி

கொழும்பு புகையிரத நிலையம் முன்பாக...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.நகரில் இடம்பெற்ற பிரதேச விளையாட்டு விழா









யாழ்ப்பாண பிரதேச செயலகம் மற்றும் வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களம் இணைந்து நடத்திய பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான பிரதேச விளையாட்டு விழா நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு அரங்கில் பிரதேச செயலாளர் சாம்பசிவம் சுதர்சன் தலைமையில் சிறப்பாக இடம்பெற்றது.

மேற்படி விழாவில் யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

இதில் 15 விளையாட்டுக் கழகங்களைச் சேர்ந்த வீர, வீராங்கனைகள் பங்கு பற்றிய தடகளப் போட்டிகளின் இறுதிப் போட்டிகளும், உதைபந்தாட்டப் போட்டியும் இடம்பெற்றன. போட்டிகளில் வெற்றியீட்டிய வீர, வீராங்கனைகளுக்கு வெற்றிக் கேடயங்கள் வழங்கி வைக்கப்பட்டன. (4-6-18)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் வசாவிளானில் 42 பரப்பு காணி 2 பரப்பாகவும் 2 1/2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.

- வசாவிளான் மகா வித்தியாலயத்தில் இருந்து (பலாலி வீதி)1 Km தூரம்.
- வசாவிளான் தபால் கந்தோர் அருகாமை (300m தூரம்)
- 14 அடி பாதையுடன்
- 1 பரப்பின் விலை 4 இலட்சம்.
- அச்சுவேலி – தெல்லிப்பளை பிரதான வீதியில் இருந்து 800m தூரம்.

(9589)

தொடர்பு

074 043 6599, 074 043 6375

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் வசாவிளான் ஒட்டகப்புலத்தில் 39 பரப்புக் காணி 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.

- அச்சுவேலி – தெல்லிப்பளை பிரதான வீதியில் இருந்து இரண்டாவது காணி.
- பிரதான (காபற்) வீதியில் இருந்து 50m தூரத்தில்.
- ஒட்டகப்புலம் றோ.க.த.கலவன் பாடசாலைக்கு அருகாமையில்.
- 14 அடிப்பாதையுடன்.
- அச்சுவேலி பஸ் நிலையத்தில் இருந்து 2km தூரம்.

ஒரு பரப்பின் விலை: ஆறு இலட்சத்து ஐம்பது ஆயிரம் ரூபாய்

(9588)

077 911 6983

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603,
021 567 1532


## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2604

### யாழினி




### ஜீவிதன்




### ருக்சாயினி




### வைதேஷ்




### குகப்பிரியா




### றேணுகா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பணிப்புறக்கணிப்பால் நாடு ஸ்தம்பிதம்


(யாழ்ப்பாணம்)

**ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தை பதவி விலகக்கோரி நாடு முழுவதும் நேற்று பல தொழிற்சங்கங்கள் பணிப்புறக் கணிப்பில் ஈடுபட்டதால் பொதுமக்களின் அன்றாட செயற் பாடுகள் பாதிக்கப்பட்டன.**

வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டு தனியார் மற்றும் அரச போக்குவரத்து சேவைகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இடம்பெற்றது.


பாடசாலைகள் மற்றும் வங்கிச் சேவைகள் பாதிக் கப்பட்டுள்ளதோடு புகையிரத சேவை, தபால் சேவைகள் என்பன முற்றாக செயலிழந்துள்ளன. அத்தோடு வீதிகளில் பொதுமக்களின் நடமாட்டம் குறைவாகவே காணப்பட்டது.






சாவகச்சேரி



யாழ்ப்பாணம்



முறிகண்டி




வவுனியா








மன்னார்



கொழும்பு

(படங்கள்- சிவசாந்தன், ரவிசாந், சுபேசன், கஜிந்தன், சதீஸ், சப்தசங்கரி, தேவானந்தன், வசந்தரூபன்,ஜோசப் நயன்)

## இராசிபலன்

29.04.2022
சித்திரை 16, வெள்ளிக்கிழமை
சதுர்த்தசி பின்னிரவு 1.47 மணிவரை

ரேவதி முன்னிரவு 7.36 மணிவரை
சுப நேரம் 5.58-7.28 மணி வரை
இராகுகாலம் -10.28-11.58 மணிவரை

சந்திராஷ்டமம்- மகம், பூரம்

வளவன்

**மேஷம்** காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும் நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.

**ரிஷபம்** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மிதுனம்** பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும், மனநிறைவு கூடும் நாள், செய்தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கடகம்** பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரும், விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், புதிய முயற்சிகள் கைகூடும்.

**சிம்மம்** தொழில் ரீதியாக சில குழப்பங்கள் தோன்றி மறையும், சிந்தித்துச் செயற்பட வேண்டிய நாள், பொது வாழ்வில் வீண் பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது.

**கன்னி** கேளிக்கை, கொண்டாட்டங்களில் நாட்டம் காட்டுவீர்கள், செய்தொழிலில் உற்சாகத்துடன் பணி புரிவீர்கள், காரிய அனுகூலமுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**துலாம்** நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** தாழ்ந்த சுபாவமுண்டு, செய்தொழிலில் ஆர்வம் கூடும், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டும் நாள்.

**தனுசு** நண்பர்களின் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறும்.

**மகரம்** தொழில் ரீதியாக ஏட்டிக்குப் போட்டியாக இருந்தவர்கள் இணக்கத்தோடு நடந்து கொள்வர், உற்சாகத்தோடு செயற்படுவீர்கள், உறவினர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும்.

**கும்பம்** குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், செல்வ நிலை உயரும் நாள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**மீனம்** ஆலய வழிபாடு ஆனந்தம் தரும், கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், போசன சுகமுண்டு, கற்பனை மிகுதியான நாள், செய்தொழிலில் மேன்மையுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசைக்காரர்களுக்கு கை நீளம்.

# மருத்துவமனை ஊழியர்கள் கறுப்புப்பட்டி அணிந்து போராட்டம்





(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார மருத்துவமனை ஊழியர்கள் நேற்று வியாழக்கிழமை மருத்துவமனை முன்றலில் கறுப்புப்பட்டி அணிந்து கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றினை முன்னெடுத்தனர்.

நாடளாவிய ரீதியாக தொழிற்சங்கங்கள் அரசாங்கத்திற்கு எதிராக பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து முன்னெடுத்த போராட்டத்திற்கு ஆதரவளிக்கும் முகமாக மருத்துவமனை ஊழியர்கள் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அத்துடன் யாழ். போதனா மருத்துவமனை ஊழியர்களும் போராட்டத்தில் ஈடுபட்டனர். (4-6-30-33)



மருத்துவ பீட மாணவன் இம்மானுவேல் சாமுவேலின் நான்காவது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் 35 ஆவது அணி பழைய மாணவர்களும், மருத்துவபீட மாணவர் ஒன்றியமும் இணைந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை மற்றும் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனை இரத்த வங்கிப் பிரிவுகளின் அனுசரணையில் மாபெரும் இரத்ததான முகாம் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது.

(படம்-ரவிசாந்)



பருத்தித்துறை புலோலி வடக்கில் வறுமைக் கோட்டிற்குட்பட்ட குடும்பம் ஒன்றிற்கு கொழும்பு றோயல் கல்லூரி பழைய மாணவர் எஸ்.நடராசாவின் 17 இலட்சம் ரூபாய் நிதி உதவியின் கீழ் வீடு ஒன்றினைக் கட்டிக் கொடுப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா நேற்று முன்தினம் புதன்கிழமை முற்பகல் இடம்பெற்றது. அடிக்கல்லினை 551 ஆவது காலாட் படையணியின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் சிந்தக விக்ரமசிங்க, பருத்தித்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், பருத்தித்துறை பொலிஸ் பொறுப்பதிகாரி ஆகியோர் நாட்டி வைத்தனர்.

(படம்- மகாலிங்கம்)

# போராட்டக்காரர்களை கண்டு ஒழிந்த கலகத்தடுப்பு பொலிஸார்

(நெளுக்குளம்)

இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தானின் அலுவலகத்திற்குள் நேற்று கலகத்தடுப்பு பொலிஸார் குவிக்கப்பட்டனர். பொருட்களின் விலை ஏற்றத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தும், ஜனாதிபதி பதவி விலக வேண்டும் என்று கோரியும் ஒன்றிணைந்த தொழிற்சங்கங்களால் வவுனியாவில் நேற்று பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது வவுனியா கண்டிவீதியில் அமைந்துள்ள இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தானின் அலுவலகம் நோக்கி ஆர்பாட்டக்காரர்கள் சென்றனர். இதனையடுத்து அசம்பாவிதங்களைத் தடுக்கும் முகமாக கலகத்தடுப்பு பொலிஸார் அங்கு குவிக்கப்பட்டனர்.

எனினும் போராட்டக்காரர்கள் அலுவலகத்திற்கு முன்பாக வருகை தந்த போது கலகத்தடுப்பு பொலிஸார் வெளியில் வராமல் இராஜாங்க அமைச்சரின் அலுவலகத்திற்குள் சென்று ஒழிந்து நின்றனர். ஆர்ப்பாட்டங்கள் முடிவடைந்த பின்னரே அவர்கள் வெளியில் வருகை தந்தனர். (4-6-299)

## இரத்ததான முகாம்

(குப்பிழான்)

விதையனைத்தும் விருட்சமே இளைஞரணி மற்றும் இளவாலை சித்திரமேழி பழனியானந்தன் சனசமூக நிலையம் ஆகியன இணைந்து நடத்தும் மாபெரும் இரத்ததான முகாம் நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் பிற்பகல் 3.30 மணி வரை இளவாலை சித்திரமேழி பழனியானந்தன் சனசமூக நிலைய மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

மேற்படி இரத்ததான முகாம் நிகழ்வில் அனைத்துக் குருதிக் கொடையாளர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு இரத்ததான முகாம் நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (4-6-18)

## புத்தகத் திருவிழா

(குப்பிழான்)

உலக புத்தக தினத்தை முன்னிட்டுச் சிறகுகள் அமையத்தின் ஏற்பாட்டில் "புத்தகத் திருவிழா" இன்று வெள்ளிக்கிழமை முதல் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை வரை தொடர்ந்தும் மூன்று தினங்கள் பலாலி வீதி, கோண்டாவில் சந்திக்கு அண்மையில் இயங்கி வரும் எழுதிரள் பணிமனையில் நடைபெறும். மூன்று தினங்களும் புத்தகக் கண்காட்சியும், விற்பனையும் இடம்பெறும் எனவும் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (4-6-18)

## நூல்வெளியீடு

(யாழ்ப்பாணம்)

இடைக்காடு இணையத்தின் அனுசரனையில் இடைக்காடர் ஈஸ்வரனால் எழுதப்பெற்ற இடைக்காடு எம் தாயகம் - வரலாறும் வளர்ச்சியும் என்ற நூலின் வெளியீட்டு நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இடைக்காடு மகா வித்தியாலய பொன்விழா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஓய்வுநிலை வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வரவேற்புரையை ஓய்வு நிலை உதவிக்கல்விப் பணிப்பாளர் நா.சுவாமிநாதனும் வெளியீட்டுரையை ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர் செ. விஸ்வலிங்கமும் நூல் நயப் புரையை கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி முதல்வர் செந்தமிழ்ச்சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசனும் வழங்குவர். (4-6-33)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

இருபாலை கிழக்கு, அருள்மிகு வீரகத்திப் பிள்ளையார் ஆலய வருடாந்த, அலங்கார உற்சவம் எதிர்வரும் 2 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறவுள்ளன.

இறுதிநாள் சங்காபிஷேகம் நடைபெற்று மணவாளக் கோல நிகழ்வும் நடைபெறவுள்ளது. (4-6)

# மக்கள் விடுதலை முன்னணியால் யாழில் மேதினச் சுவரொட்டிகள்




(குப்பிழான்)

யாழ்.மாவட்டத்தின் பல பகுதிகளிலும் மக்கள் விடுதலை முன்னணியின் மேதினச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் ஒட்டப்பட்டுள்ள குறித்த சுவரொட்டிகளில் மக்களை வதைக்கின்ற அரசாங்கத்தை விரட்டியடிப்போம்!, மக்கள் நேயமுள்ள ஆட்சியைக் கட்டியெழுப்போம்! எனும் சுலோகங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. (4-6-18)



தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வரணி வடக்கு பனைசார் உற்பத்திக் கிராம பயனாளிகள் 100 பேருக்கு நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் வாழ்வாதார உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன.

(படம்-சுபேசன்)

# யாழைச் சேர்ந்த இருவர் தமிழகத்தில் தஞ்சம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரண்டு இளைஞர்கள் கடல் வழியாக இந்தியா சென்று தஞ்சமடைந்துள்ளனர்.

குறித்த இருவரும் நேற்று முன்தினம் புதன்கிழமை குருநகரப்பகுதியில் இருந்து படகொன்றின் மூலம் சென்று, நேற்று அதிகாலை தனுஷ்கோடிக்கு அருகில் தரையிறங்கிய வேளை தமிழக கடலோரப் பாதுகாப்புப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக கடந்த மார்ச் 22ம் திகதியில் இருந்து நேற்று வரை 77 இலங்கையைச் சேர்ந்தவர்கள் அகதிகளாக தமிழகத்திற்குச் சென்றுள்ளனர். (4-6-33-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளூர் உற்பத்தியை வலுப்படுத்தாவிட்டால்

# விரைவில் உணவு நெருக்கடி

## விவசாய நிபுணர்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

**விவசாயிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் உள்ளூர் உணவு உற்பத்தியை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்காவிட்டால் இந்நாட்டு மக்கள் விரைவில் உணவு நெருக்கடியை சந்திக்க நேரிடும் என விவசாய நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.**

நாட்டில் நெல் அறுவடை 45 வீதத்திற்கும் அதிகமாகக் குறைந்துள்ளதாகவும் பல்வேறு பகுதிகளில் யூரியா உரத்தின் விலை அதிகரித்துள்ளதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

கடைகளில் 50 கிலோ யூரியா உர மூட்டை 40 ஆயிரத்திற்கு விற்பனை செய்யப்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## போராட்டங்களை முன்னெடுக்க சாணக்கியனுக்கு தடை உத்தரவு



(மட்டக்களப்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் அரசாங்கத்திற்கு எதிராக போராட்டத்தில் ஈடுபடுவதை தடுக்கும் வகையிலான நீதிமன்ற உத்தரவு பொலிஸாரினால் வழங்கப்பட்டுள்ளது.

களுவாஞ்சிக்குடி பொலிஸாரினால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள குறித்த நீதிமன்ற உத்தரவு நேற்று வியாழக்கிழமை இரா.சாணக்கியனிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தனக்கு எதிரான நீதிமன்ற தடை உத்தரவு குறித்து இரா.சாணக்கியன் கருத்துத் தெரிவிக்கையில்,

இன்று இலங்கையின் அனைத்து பிரதேசங்களிலுமே மக்கள் வீதிகளில் போராடும் போது, களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மாத்திரம் ஒரு நீதிமன்ற தடை உத்தரவினை எடுத்திருக்கின்றார். இந்த நாட்டில் தமிழர்களுக்கு இன்னுமொரு சட்டமா? என்பதுதான் நீண்டகாலமாக எங்களுக்கு இருக்கின்ற கேள்வி.

இலங்கையில் ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் நடைபெறாத இடங்கள் இல்லை. அவ்வாறு நடக்கும்போது, களுவாஞ்சிக்குடியில் மாத்திரம் இவ்வாறு தடை உத்தரவினை பெற்றுக் கொண்டுள்ளமையினை ஏற்றுக்கொள்ள முடியாது.

நான் இன்று வரை போராட்டங்களை செய்ய வேண்டும் என நினைக்கவில்லை. ஆனால் இந்தத் தடை உத்தரவு கிடைத்ததற்குப் பின்னர் போராட்டம் செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தினை தருகின்றது.

கோட்டா கோ கோம் என்ற விடயம் நடைபெறும் வரை, அதாவது கோட்டாபய ராஜபக்ஷ வீடு செல்லும்வரை இந்தப் போராட்டங்கள் தொடர வேண்டும். அதிலே என்னுடைய பங்களிப்பும் நிச்சயம் இருக்கும். என அவர் தெரிவித்தார். (நி-6)

## சுரேன் ராகவன், சாந்த பண்டார இருவரையும்

# இராஜாங்க அமைச்சிலிருந்து நீக்கினால் மட்டுமே ஜனாதிபதியுடன் பேச்சு

## ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அறிவிப்பு

(கொழும்பு)

சுரேன் ராகவன், சாந்த பண்டார ஆகியோரை இராஜாங்க அமைச்சுகளில் இருந்து நீக்கினால் மட்டுமே இன்று ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவோம் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அறிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகரவினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இல்லையென்றால் குறித்த கலந்துரையாடலை பகிஷ்கரிக்கவுள்ளதாகவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-6)

## வருட இறுதிக்குள்

# அமெரிக்க டொலர் 500 ஐ தாண்டும்

## முன்னாள் கணக்காய்வாளர் எச்சரிக்கை

(கொழும்பு)

அமெரிக்க டொலரின் மதிப்பு வருட இறுதிக்குள் 500 ஆக அதிகரிக்கும் என முன்னாள் கணக்காய்வாளர் காமினி விஜேசிங்க எச்சரித்துள்ளார்.

தற்போதைய நெருக்கடியை சீர் செய்வதற்கான பாதையில் கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் நெருக்கடியால் பாதிக்கப்பட்ட தேசத்தை மீண்டும் கட்டியெழுப்ப புதிய வேலைத்திட்டத்தின் அவசியத்தையும் அவர் வலியுறுத்தியுள்ளார். (நி-6)

# மணலின் விலை சடுதியாக உயர்வு

(கொழும்பு)

எரிபொருள் விலையேற்றம் காரணமாக மணல் கியூப் ஒன்றின் விலை 21,000 ரூபா வரை உயர்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அண்மைய நாட்களில் 13,000 ரூபாவாக இருந்த ஒரு கியூப் மணலின் விலை 21,000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் விலை அதிகரிப்பு, போக்குவரத்துக் கட்டணம், மணல் ஏற்றிச் செல்வதற்கான வாடகை போன்றவற்றின் காரணமாகவே மணல் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் கட்டுமானப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக பலரும் தெரிவிக்கின்றனர். (நி-6)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 1<br>கி.பா: சூரி 10 செவ் 8 இல் உயரம் :152 cm<br>தகைமை/தொழில்: A/L தையல்<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்<br>தொ.இ: B/12551 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: சூரி 10 செவ் 8 இல் உயரம்: 152 cm<br>தகைமை/தொழில்:A/L தையல்<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்<br>தொ.இ:G/9452 |
| பிறப்பு: 1982 இந்து நட்சத்திரம்: மகம் 1<br>கி.பா:7 ¾ சூரி 9 செவ் 3 இல்<br>உயரம் :5' 4"<br>தகைமை/தொழில்:MBBS Doctor<br>எதிர்பார்ப்பு: உயர்பதவி<br>தொ.இ: B/12554 | பிறப்பு: 1982 இந்து நட்சத்திரம்: மகம் 1<br>கி.பா:7 ¾ சூரி 9 செவ் 3 இல்<br>உயரம்: 5' 4"<br>தகைமை/தொழில்: MBBS Doctor<br>எதிர்பார்ப்பு: உயர்பதவி<br>தொ.இ:G/9454 |
| பிறப்பு: 1982 இந்து நட்சத்திரம் : பூராடம் 1<br>கி.பா:20 ½ சூரி 12 செவ் 3 இல்<br>தகைமை/தொழில்:Software Engineering Following Demas IT (சொந்தம்)<br>எதிர்பார்ப்பு:தொழில் செய்யும் பெண் சைவபோசணம் அசைவமும் ஏற்றுக்கொள்ளப்படும்.<br>தொ.இ: B/12557 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 3<br>கி.பா: 13 சூரி 3 செவ் 2 இல்<br>உயரம்: 153 cm<br>தகைமை/தொழில்:A/L, NDE B.of. Educ in English<br>எதிர்பார்ப்பு : பட்டதாரி, அரச உத்தியோகம் கனடா விரும்பத்தக்கது<br>தொ.இ:G/9462 |
| பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 3<br>கி.பா: 51 ¼ சூரி, செவ் 12 இல்<br>உயரம்:5'7"<br>தகைமை/தொழில்: NCT(QS) கட்ட ஒப்பந்தகாரர் படவரைஞர்<br>எதிர்பார்ப்பு: தகுந்த தனியார் உத்தியோகம்<br>தொ.இ: B/12558 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 3<br>கி.பா: 19 சூரி 5 செவ் 2 இல் உயரம் :5'4"<br>தகைமை/தொழில் :A/L<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம் விரும்பத்தக்கது வெளிநாடு London , Canada<br>தொ.இ:G/9464 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 32

# எவரையும் பார்த்த மாத்திரத்தில் எடைபோடக் கூடாது



ஒரு செல்வந்த முதலாளியின் வீட்டில் ஒருவர் காவலாளியாக வேலை பார்த்து வந்தார். முதலாளி தினமும் வீட்டுக்கு வரும் போது ஓடோடிச் சென்று வீதிக் கதவை திறந்து அவருக்கு வணக்கம் சொல்வது அவரது வழக்கம். ஆனாலும் ஒரு நாளேனும் அந்த முதலாளி பதில் கூறியதும் கிடையாது காவலாளி முகத்தை ஏறெடுத்துப் பார்ப்பதும் கிடையாது.

ஒரு நாள் பசியோடிருந்த அந்தக் காவலாளி வீட்டுக்கு வெளியே உள்ள குப்பைத்தொட்டியில் வீசப்பட்ட உணவுகள் ஏதும் இருந்தால் எடுத்து சாப்பிடலாம் என குப்பைத்தொட்டியை கிளறும் போது முதலாளி அதனைக் கண்டார். ஆனாலும் வழக்கம் போல எதையுமே கண்டுகொள்ளாமல் சென்றுவிட்டார்.

அடுத்த நாள் அதே இடத்தில் காவலாளி உணவைத் தேடும் போது புதிதாக தயாரிக்கப்பட்ட சுத்தமான உணவுகள் ஒரு பையினுள் காணப்பட்டது. காவலாளி சந்தோஷத்தில் எங்கிருந்து வந்தது என்றெல்லாம் பார்க்காமல் எடுத்துச் சென்றான்.

இவ்வாறே தினமும் அதே இடத்தில் ஒரு பையிருக்கும். அந்தப் பை நிறைய உணவுப்பொருட்கள் இருக்கும். அவனும் அதை தவறாமல் எடுத்து தன் மனைவி, குழந்தைகளுக்கு கொடுத்து வந்தான். இருந்தாலும் எந்த முட்டாள் இப்படித் தினமும் பொருட்களை வாங்கி இங்கே விட்டுச் செல்கிறான் என மனதுக்குள் ஒரு நகைப்புடன் கூடிய கேள்வியும் வேற அவன் மனதில் ஓடியது.

திடீரென ஒரு நாள் முதலாளி இறந்துவிட்டார். வீடு நிறைய முதலாளியின் உறவினர்களும், நண்பர்களும் வந்தனர். அன்று அதே இடத்தில் உணவுப்பொதியை தேடினான். உணவு இருக்கவில்லை. ஒரு வேளை பார்க்க வந்தவர் யாரேனும் எடுத்திருக்க முடியும் என நினைத்து விட்டான். இரண்டாம் நாள் பார்க்கிறான், அந்த இடத்தில் உணவுப்பை இல்லை. மூன்றாம் நாள், நான்காம் நாள் என பார்க்கிறான். உணவுப்பை இருக்கவில்லை.

இப்படியே சென்றதால் அந்தக் காவலாளிக்கு தன் குடும்பத்துக்கு உணவளிக்கப் பெரும் சிரமமாய் போயிற்று. உடனே தனது முதலாளியம்மாவிடம் போய் சம்பளத்தை உயர்த்தவும் இல்லையாயின் வேலையை விட்டு விடுவதாகவும் கூறினான். அதற்கு முதலாளியம்மா மறுத்துவிட. வேறு வழியில்லாமல் வீதியோரம் எடுக்கும் உணவுப்பை கதையையும், அது இல்லாததால் தன் குடும்பம் படும் அவஸ்தையையும் சொல்ல. உடனே முதலாளியம்மா கேட்டார் எப்போதிலிருந்து உணவுப்பை இல்லாமல் போனதென்று. அதற்கு அவனும் முதலாளி இறந்த நாளிலிருந்து என சொன்னதும், முதலாளியம்மா 'ஓ' என் அழத்தொடங்கினார். இதனைப் பார்த்து கவலையடைந்த காவலாளி சம்பள உயர்வு வேண்டாம், நான் இங்கேயே வேலை செய்கிறேன், அழுவதை நிறுத்துங்கள் எனக் கூறினான்..

அதற்கு முதலாளியம்மா, நான் அதற்கு அழவில்லை. என் கணவர் தினமும் ஏழு பேருக்கு உணவளித்து வந்தார். அதில் ஆறு பேரை ஏற்கனவே இனம் கண்டுவிட்டேன். ஏழாம் நபரைத்தான் இத்தனை நாளாய் தேடிக்கொண்டிருந்தேன். ஏழாவது நபர் நீதான் என தெரிந்து கொண்டதும் சந்தோஷத்தில் அழுகிறேன் என்றாள்.

நான் தினமும் தவறாமல் வணக்கம் சொல்லியும் ஏறெடுத்தும் கூட பார்க்காத நம்ம முதலாளியா இப்படி நமக்கு உணவு தந்தார் என நம்பியும் நம்பாமலும் யோசித்தபடியே அவன் சென்றான்.

அடுத்த நாளிலிருந்து முதலாளியின் மகன் தினமும் காவலாளியின் வீடு தேடி வந்து உணவுப்பையை காவலாளியின் கையிலே கொடுத்துச் செல்வான். காவலாளி நன்றி சொல்லியும் முதலாளி மகன் அதற்கு பதில் சொல்லாமலே செல்வான், அவனது தந்தையைப் போல. ஒரு நாள் இப்படித்தான் முதலாளியின் மகன் வீடு தேடிவந்து கையில் உணவுப்பையை கொடுக்கும் போது வழக்கம் போல நன்றி சொன்னான் காவலாளி. அதற்கு அங்கிருந்து எந்தப் பதிலும் இல்லை.

பொறுமையை இழந்த காவலாளி மிகவும் உரத்த குரலில் நன்றி சொன்னான். திரும்பிப்பார்த்த அந்த சிறுவன் "எனக்கும் என் தந்தையைப் போல் காது இரண்டும் கேட்காது" என்று சொல்லிவிட்டு திரும்பிப் போனான்.

நாமும் இவ்வாறு தான் அடுத்தவரது நிலைமைகள் புரியாது பார்த்த மாத்திரத்திலே அவர்களைத் தவறாக முடிவெடுத்துவிடுகிறோம். அடுத்தவரது நடவடிக்கைகளுக்குப் பின்னால் ஒளிந்துள்ள உண்மைத்தன்மையை அறியாமல்.

இந்தக் கதையிலிருந்து இரண்டு விடயங்களை எடுத்துக்கொள்ளலாம்

01. எதையும், யாரையும் பார்த்த மாத்திரத்திலே நம்பி முடிவெடுக்கக் கூடாது.
02. நாம் சந்திக்கும் ஒவ்வொரு மனிதர்களும் வெவ்வேறு விதமான போராட்டங்களிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

## கார் உற்பத்தியில் பெரும் வீழ்ச்சி

(லண்டன்)

உலகளாவிய விநியோகச் சங்கிலி பிரச்சினைகளுடன் உற்பத்தியாளர்கள் போராடுவதால், பிரித்தானியாவின் கார் உற்பத்தி தொடர்ந்து வீழ்ச்சியடைந்துள்ளது.

கடந்த ஆண்டை விட 2022 ஆம் ஆண்டு முதல் மூன்று மாதங்களில் கிட்டதட்ட 100,000 இற்கும் குறைவான கார்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

மோட்டார் உற்பத்தியாளர்கள் மற்றும் வர்த்தகர்கள் சங்கத்தின் கருத்தின்படி, உற்பத்தி கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கு குறைந்துள்ளது.

மோட்டார் உற்பத்தியாளர்கள் மற்றும் வர்த்தகர்கள் சங்கமானது, கணினி சிப்களின் உலகளாவிய பற்றாக்குறை மற்றும் உற்பத்தியாளர்களுக்கான எரிசக்தி செலவுகள் அதிகரிப்புடன் சரிவை இணைத்துள்ளது.

ஆண்டின் முதல் மூன்று மாதங்களில், பிரித்தானியாவில் மொத்தம் 207,347 புதிய கார்கள் உருவாக்கப்பட்டுள்ளன. 2021 ஆம் ஆண்டில் அதே மூன்று மாதங்களில் 306,558ஆகக் குறைந்துள்ளது, அப்போது தொற்றுநோய் உற்பத்தியாளர்களுக்கு கூடுதல் அழுத்தங்களை உருவாக்கியது.

உக்ரைனில் நடக்கும் யுத்தம் உற்பத்தியிலும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. தொழிற்சாலைகள் இப்பகுதியில் இருந்து வரும் வயரிங் அமைப்புகள் போன்ற பாகங்களைப் பெற்றுக்கொள்ள போராடுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# உக்ரைனு

# சீற்றம

## அனைத்து ஆ

(மொஸ்கோ) -
உக்ரைன் விவக
பதிலடியை எதிர்
நாடுகளுக்கு புதி


"இதற்கான அனைத்துக் கருவிகளும் எங்களிடம் உள்ளன, தேவைப்பட்டால், நாங்கள் அவற்றைப் பயன்படுத்துவோம்," என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அனைத்து முடிவுகளையும் நாங்கள் ஏற்கனவே எடுத்துவிட்டோம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

புடினின் புதிய அச்சுறுத்தல் குறித்து சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# அகற்றப்ப

## உக்ரைன்-ரஷ்ய நட்பின் நினை



(கீவ்)

ரஷ்யாவிற்கும் உக்ரைனுக்கும் இடையிலான நட்பைக் குறிக்கும் வகையில், உக்ரைன் தலைநகர் கீவ்வில் அமைக்கப்பட்டிருந்த சோவியத் கால நினைவுச் சின்னம் அகற்றப்பட்டது.

சோவியத் யூனியனின் 60வது ஆண்டு விழாவை நினைவு கூரும் வகையில் கடந்த 1982 ஆம் ஆண்டு ஆண்டு People`s Friendship Arch என்றழைக்கப்படும் வானவில் வடிவிலான நினைவுச்சின்னம் அமைக்கப்பட்டது.

அதற்கு அருகிலேயே, சுமார் 27 அடி உயரத்தில் உக்ரைன் மற்றும் ரஷ்ய தொழிலாளி ஒரு பீடத்தில் ஒன்றாக இணைந்து நிற்பது போன்ற சிலையும் நிறுவப்பட்டது.

உக்ரைன் மீதான ரஷ்யப் படை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...னுக்கான ஆதரவை அதிகரிக்கும் நாடுகள்

# ...மடையும் ரஷ்ய ஜனாதிபதி

## ...ஆயுதங்களையும் பயன்படுத்த தயங்க மாட்டோம் என எச்சரிக்கை

...ா)

**...விவகாரத்தில் தலையிடும் எந்த நாடும் "மின்னல் வேகமான" இராணுவ ...எதிர்கொள்ளும் என்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் மேற்கு ... புதிய அச்சுறுத்தலை மீண்டும் விடுத்துள்ளார்.**



அண்மைய நாட்களில் மேற்கத்தேய நாடுகள் உக்ரைனுக்கு ஆதரவை அதிகரித்ததை அடுத்து புடின் இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

உக்ரைன் ரஷ்யாவை தோற்கடிப்பதை உறுதிசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அமெரிக்கப் பாதுகாப்பு செயலாளர் லாயிட் ஆஸ்டின் நேற்று முன்தினம் அறிவித்திருந்தார்.

மேலும், சமீப நாட்களில், உக்ரைனுக்கு இராணுவ ஆதரவை அதிகரிப்பதற்கான உறுதிமொழிகள் அதிகரித்து வருகின்றன.

இதில் 50 விமான எதிர்ப்பு டாங்கிகளை அனுப்புவதாக ஜேர்மனி அறிவித்தது, உக்ரைனுக்குப் போர் விமானங்களை வழங்க பிரிட்டனும் அழைப்பு விடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உக்ரைனுக்கு ஆயுதங்களை வழங்குவதன் மூலம் மேற்கு நாடுகள் "நெருப்பில் எண்ணெயை ஊற்றுவதாக" ரஷ்யாவின் வெளியுறவு அமைச்சர் செர்ஜிலாவ்ரோவ் இந்த வார தொடக்கத்தில் தெரிவித்தார்.

அத்துடன், இந்த மோதல் மூன்றாம் உலகப் போருக்கு வழிவகுக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

போலந்து மற்றும் பல்கேரியாவிற்கான எரிவாயு விநியோகத்தை ரஷ்யா நிறுத்தியுள்ளதுடன், பதட்டங்கள் அதிகரித்துள்ள நிலையில் புடினின் எச்சரிக்கை வெளிவந்துள்ளது. (நி-6)

# ...பட்டது

## ...நினைவுச்சின்னம்



...யெடுப்பிற்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் இந்த நினைவுச் சின்னம் அகற்றப்பட்டதாக கீவ் மேயர் தெரிவித்துள்ளார். (நி-6)

# இந்தியாவிற்கு உதவத் தயார்

## அமெரிக்கா அறிவிப்பு

(வோஷிங்டன்)

சீனாவின் கடற்படை நடவடிக்கைகளை எதிர்கொள்ளும் வகையில் இந்தியாவிற்கு உதவத் தயாராக இருப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இந்தியப் பெருங்கடல் பகுதியில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்படுகின்ற நிலையில் அமெரிக்க அதிகாரி ஒருவர் மேற்படி தெரிவித்துள்ளார்.

இந்தியா தனது இராணுவத்தை நவீனமயமாக்கவும், இந்திய இராணுவத்தினர் ரஷ்யாவின் பூர்வீகமான ஆயுதக் கொள் முதலை சார்ந்து இருக்காமல் இருப்பதற்கும் அமெரிக்கா உதவும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

# போதைப்பொருள் கடத்தியவருக்கு சிங்கப்பூரில் மரண தண்டனை நிறைவேற்றம்

(சிங்கப்பூர்)

சிங்கப்பூரில் போதை வஸ்த்து கடத்தலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இந்திய வம்சாவழி மலேசியத் தமிழர் ஒருவருக்கு நேற்று முன்தினம் புதன்கிழமை சாங்கி நகரிலுள்ள சிறைச்சாலையில் மரணதண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

மரணதண்டனை நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் தனக்கு விருப்பமான ஆடைகளை அணிந்து இறுதிப் புகைப்படத்தை எடுத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டதுடன் தனது குடும்பத்தினருடன் இரு மணித்தியாலங்களை கழிக்கவும் அனுமதிக்கப்பட்டது. (நி-6)

# உக்ரைன் மீதான ரஷ்யாவின் தாக்குதல்கள் இனப்படுகொலையே

## — கனேடிய பாராளுமன்றத்தில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றம் —

(ஒட்டாவா)

உக்ரைன் மீதான ரஷ்யாவின் தாக்குதல்கள் "இனப்படுகொலை" என ஏகமனதாக ஏற்று அங்கீகரித்து கனேடிய பாராளுமன்றம் நேற்று முன்தினம் புதன்கிழமை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

ரஷ்யாவால் மனிதகுலத்திற்கு எதிரான கட்டமைக்கப்பட்ட கொடூரங்கள் மற்றும் பாரிய போர்க்குற்றங்கள் இழைக்கப்பட்டதற்கான ஏராளமான சான்றுகள் இருப்பதாக கனேடிய பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

பெப்ரவரி 24 ஆம் திகதி உக்ரைன் மீதான போரை ரஷ்யா ஆரம்பித்த பின்னர் அந்நாடு மீது பொருளாதாரத் தடைகளை விதித்துள்ள பல நாடுகளில் கனடாவும் ஒன்று.

உக்ரைன் கிழக்கில் உள்ள டான்பாஸ் பிராந்தியத்தின் சில பகுதிகளை ரஷ்யா இணைக்க முயற்சித்ததற்கு உடந்தையாக இருந்த 203 நபர்கள் மீது மேலும் பொருளாதாரத் தடைகளை நேற்று முன்தினம் கனடா விதித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தில் சிங்களவர்களும் கலந்து கொள்ளுங்கள்

# செல்வம் எம்.பி.கோரிக்கை

(நெளுக்குளம்)

நாட்டில் இன ஐக்கியம் உருவாகியுள்ளதாக இருக்குமேயானால் முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தில் சிங்கள முஸ்லீம் மக்களும் கலந்துகொள்ள வேண்டுமென வன்னி பாராளுமன்ற உறுப்பினரும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் மக்கள் எதிர்கொண்டுள்ள சிக்கல் நிலைமைக்கு காரணமான ஆட்சியாளர்களை வீட்டுக்கு செல் என காலிமுகத்திடல் தொடக்கம் நாடு பூராகவும் போராட்டம் இடம் பெறுகின்றது.

இந்தப் போராட்டங்கள் ஜனநாயகரீதியான போராட்டம் என்பதால் எவரையும் கைது செய்யவில்லை. அந்த வகையில் நாமும் இதனை வரவேற்பதோடு போராட்டத்திற்கான ஆதரவை தெரிவிக்கின்றோம்.

அத்துடன் ஜனநாயக ரீதியான இப் போராட்டத்தில் தமிழ் மக்களுக்கு. யுத்தகாலத்தில் அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்பதனை சகோதர சிங்கள மக்களும் தெரிவித்து வருகின்றனர். இது இந்த நாட்டில் ஏற்பட்ட பாரிய மாற்றமாகும்.

இந்நிலையில் தமிழ் மக்களின் மனங்களில் புரையோடிப் போயுள்ள யுத்த வலிகளை நினைவுகூர்ந்து யுத்தத்தால் மரணித்த தமிழர்களை நினைவு கூரும் முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தில் சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களும் கலந்துகொண்டு அம் மக்களுக்காக அஞ்சலி செலுத்த அழைத்து நிற்கின்றேன் என தெரிவித்துள்ளார்.(4-6-299)

# கட்டுப்பாடுகளுடன் எரிபொருள் விநியோகம்



(நெளுக்குளம்)

நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் எரிபொருளுக்காக நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலை மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

அந்தவகையில், வவுனியா, கிளிநொச்சியில் உள்ள எரிபொருள் நிலையங்களை சூழ அதிகளவு தூரம் வரை மண்ணெண்ணெயை பெற்றுக்கொள்ள மக்கள் வரிசையில் காத்திருந்தனர்.

அத்தோடு எரிபொருளை கொள்வனவு செய்யும் போது மிகக் குறைந்த அளவிலேயே எரிபொருளை பெற்றுக் கொள்ளுமாறு எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் கட்டுப்பாடுகளை விதித்து வழங்கி வருவதாகவும், ஒரு நபருக்கு 500 ரூபாவிற்கு என்ற அடிப்படையில் மண்ணெண்ணெய் விற்பனை செய்யப்படுவதாக எரிபொருளுக்காக காத்திருக்கும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (4-6-299-316)

## ஒன்றிணைந்த கூட்டு தொழிற்சங்கத்தால்

# வவுனியா அபிவிருத்திக்குழு அலுவலகம் முன்பாக போராட்டம்

(நெளுக்குளம்)

வவுனியா மாவட்ட அபிவிருத்திக்குழு அலுவலகத்திற்கு முன்பாக நேற்று ஒன்றிணைந்த கூட்டுத் தொழிற்சங்கத்தால் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.



காமினி சிங்கள மகாவித்தியாலயத்திற்கு முன்பாக ஒன்றிணைந்த கூட்டுத் தொழிற்சங்கம் அங்கிருந்து மாவட்ட அபிவிருத்திக்குழு அலுவலகத்திற்கு முன்பாக தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தி போராட்டத்தை மேற்கொண்டுள்ளப்பட்டபோது அலுவலகம் பூட்டப்பட்டிருந்ததுடன் மதிலில் அரசுக்கு ஆதரவு வழங்காதே என்ற வசனம் தமிழ் மற்றும் சிங்களத்தில் எழுதி, கறுப்புக் கொடியை அலுவலகத்தில் பறக்கவிட்டு கண்டி வீதி வழியாக பேரணியாக தமது போராட்டத்தை முன்னெடுத்தனர். இப்போராட்டத்தில் பெருமள வான இளைஞர்கள் யுவதிகள் கலந்து கொண்டனர். (4-6-250-299)

# வவுனியாவில் விபத்து இளைஞன் படுகாயம்

(நெளுக்குளம்)

வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் காயமடைந்த நிலையில் வவுனியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று காலை இடம்பெற்ற விபத்துச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில், யாழிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற சொகுசு வாகனம் தாண்டிக்குளம் பகுதியில் துவிச்சக்கர வண்டியில் சென்ற இளைஞர் மீது மோதியே இவ் விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த விபத்திற்குள்ளான சொகுசு வாகனத்தில் அமெரிக்கன் எம்பசியைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் பயணம் செய்ததாக தெரிய வருகிறது.

குறித்த விபத்தில் கூமாங்குளத்தைச் சேர்ந்த இளைஞர் காயமடைந்த நிலையில் வவுனியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் விபத்தை ஏற்படுத்திய குறித்த வாகனம் பொலிஸ் நிலையத்திற்கு எடுத்து செல்லப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்(4-6-299)

# இராஜாங்க அமைச்சர் மஸ்தானின் வவுனியா அலுவலகம் முற்றுகை

(குருமன்காடு)

இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தானை பதவி விலகுமாறும், அரசாங்கத்திற்கு ஆதரவு கொடுத்து விட்டு ஊருக்கு வர வேண்டாம் என வலியுறுத்தியும் அவரது வவுனியா அலுவலகம் முற்றுகையிடப்பட்டது.



ஒன்றிணைந்த தொழிற்சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று வவுனியா, கண்டி வீதியில் அமைந்திருந்த பாராளுமன்ற உறுப்பினரும், கிராமிய பொருளாதார மற்றும் பயிற்செய்கை அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமான காதர் மஸ்தானின் அலுவலகம் முற்றுகையிடப்பட்டது.

"ஜனாதிபதி கோட்டபாயவை வீட்டுக்கு செல்லுமாறும், பிரதமர் மகிந்தவை பதவி விலகுமாறும் கோரிய ஆர்ப்பாட்டக்காரர்கள் மஸ்தான் எம்.பியை இராஜாங்க அமைச்சில் இருந்து உடனடியான இராஜினாமா செய், அரசாங்கத்தை ஆதரித்து விட்டு ஊருக்கு வராதே, மக்களின் கருத்துக்கு மதிப்பளி" என கோசங்களை எழுப்பியதுடன், அவரது அலுவலக வேலிப் பகுதிகளில் அரசாங்கத்திற்கு எதிரான சுலோக அட்டைகளையும் காட்சிப்படுத்தினர். (4-6-250)

# சந்தைகளில் நேற்றைய விலை


| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | கிளிநொச்சி |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 400 |
| உருளைக்கிழங்கு | 190 | 200 |
| பச்சைமிளகாய் | 300 | 350 |
| தக்காளி | 350 | 280 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 120 |
| கோவா | 120 | 120 |
| கரட் | 180 | 200 |
| பூசணி | 80 | 80 |
| புடோல் | 160 | 160 |
| வாழைக்காய் | 50 | 80 |
| சின்ன வெங்காயம் | 70 | 350 |
| பெரிய வெங்காயம் | 190 | 200 |
| பாகற்காய், | 500 | 400 |
| வெண்டைக்காய் | 200 | 240 |
| கருணைக் கிழங்கு | 180 | 180 |
| பயற்றங்காய் | 350 | 200 |
| லீக்ஸ் | 180 | 150 |
| பீற்றூட் | 170 | 200 |
| கறிமிளகாய் | 200 | 240 |
| முருங்கைக்காய் | 800 | 1200 |
| போஞ்சி | 400 | 480 |
| கத்தரிதம்புள்ள | 350 | 360 |
| கீரை - 1 பிடி | 100 | 120 |
| தேசிக்காய் | 300 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 85 | 60-80 |
| இராசவள்ளி | 180 | 200 |
| வெங்காயப்பூ | -- | -- |
| முள்ளங்கி | 120 | 240 |
| பொன்னாங்கண்ணி | 70 | 50 |
| வல்லாரை | 20 | 30 |
| ஈரப்பலா | -- | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுப கிருது வருஷ புத்தாண்டுப் பலன்கள்

## வாய்ப்புகள் வாசல் தேடி வரும்!

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம் வரை)

பெயரின் முதல் எழுத்துக்கள்: யே, யோ, ப, பி, பு, பூ, பா, ன, டே, பே உள்ளவர்களுக்கும்

**தனுசு இராசி வாசகர்களே!**

இந்தப் புத்தாண்டில் உங்கள் இராசிநாதன் குரு பகவான், சுகஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். குடும்ப ஸ்தானாதிபதி சனி, குடும்ப ஸ்தானத்திலேயே உலா வருகிறார். எனவே குடும்ப முன்னேற்றம் திருப்தி தரும். கூடுதல் வசதி வாய்ப்புகள் வந்து சேரும் புதியதொழில் தொடங்கும் திட்டங்கள் நிறைவேறும். போட்டியாக செயற்பட்டவர்கள் விலகுவர்.

**புத்தாண்டின் தொடக்க நிலை**

புத்தாண்டு தொடங்கும் பொழுது உங்கள் இராசிநாதன் குரு, சொந்த வீட்டில் சுக ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். ஏழரைச் சனியில் குடும்பச் சனியின் ஆதிக்கம் நடைபெறுகிறது. குடும்பச் சனி குடும்ப ஸ்தானத்திலேயே பலம்பெற்று சஞ்சரிக்கிறார்.

குருவிற்கு சந்திரன் 6 ஆம் இடத்திலிருந்து சகட யோகத்தை உருவாக்குகிறார். சந்திர மங்கள யோகம், சுக்கிர மங்கள யோகம், புத ஆதித்ய யோகம் போன்ற யோகங்களும் ஆண்டின் தொடக்கத்திலேயே ஏற்படுகிறது. எனவே உங்கள் வாழ்க்கைப் பாதை சீராகவும், நேராகவும் இருக்கும்.

2 இல் சனி இருப்பதால் குடும்பச்சுமை கூடும். இருப்பினும் எதையும் சமாளிக்கும் ஆற்றல் உங்களுக்கு உண்டு. பிள்ளைகளுக்கான கடமையைச் செய்து முடிப்பீர்கள். பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும்.

புதிய தொழில் தொடங்கும் திட்டங்களை அறிமுகப்படுத்துவீர்கள். மாற்றினத்து நண்பர்களின் உதவி உங்களுக்கு மகத்தானதாக இருக்கும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். சுபகாரியங்கள் இல்லத்தில் படிப்படியாக நடைபெறும். சனியின் இரண்டாவது சுற்று நடப்பவர்கள் மிகுந்த நற்பலன்களைப் பெறுவர்.

வெற்றிகள் ஸ்தானத்தில் செவ்வாய், சுக்கிரன் சேர்க்கை பெற்றிருக்கிறார்கள். எனவே பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பட்ட மேற்படிப்பிற்காகவோ, வேலைக்காகவோ வெளிநாடு செல்ல நினைத்தவர்களுக்கு நல்ல தகவல் வந்து சேரும். ஆடை, ஆபரணச் சேர்க்கை அதிகரிக்கும்.

வெளிநாடு செல்லும் வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளலாமா? என்று சிந்திப்பீர்கள். பிள்ளைகளின் கல்யாணத்தை முன்னிட்டு சீர்வரிசைப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். அசையாச் சொத்துக்களை விற்பதன் மூலம் அதிக விரயம் ஏற்படும்.

பஞ்சம ஸ்தானத்தில் சூரியன், புதன், ராகு ஆகிய கிரகங்கள் சேர்க்கை பெற்றிருக்கின்றன. புத்திர ஸ்தானம் சிறப்பாக இருந்தாலும் அதில் ராகு இருப்பதால், பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்ளுங்கள். அவர்களை நெறிப்படுத்துவது நல்லது. பூர்வீகச் சொத்துப்பிரச்சினை நல்ல முடிவிற்கு வரும். உங்களுக்குரிய பங்கை வைத்துக் கொள்ளலாமா?, உடன்பிறப்புகளிடம் கொடுத்துவிட்டு புதிய சொத்து வாங்கலாமா? என்று சிந்திப்பீர்கள். இலாப ஸ்தானத்தில் கேது இருப்பதால் பொருளாதாரப் பற்றாக்குறை ஏற்பட்டாலும், அதை சமாளித்து விடுவீர்கள்.

நான்காமிடத்தில் குரு இருப்பதால் வாகன யோகம் மற்றும் வசதி வாய்ப்புகள் அதிகரிக்கும். தாயின் உடல்நலம் சீராகும். புனித தலங்களுக்குச் செல்லும் வாய்ப்பு வரும். சேமிப்புத் தொகையைக் கொண்டு புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள். ஆரோக்கியத் தொல்லை அகலும். உத்தியோகத்தில் நீங்கள் எதிர்பார்த்த மாற்றங்கள் வந்து சேரும்.

**குருவின் பார்வை பலன்**

ஆண்டின் தொடக்கத்தில் மீனத்தில் சஞ்சரிக்கும் குருவின் பார்வை, உங்கள் இராசிக்கு 8, 10, 12 ஆகிய இடங்களில் பதிகின்றது. சொந்த வீட்டில் சஞ்சரித்துப் பார்க்கும் குருவின் பார்வை அபரிமிதமானதாக இருக்கும். எனவே இழப்புகளை ஈடுசெய்யப் புதிய வாய்ப்புகள் கைகூடி வரும். வராத பாக்கிகள் வசூலாகும். திட்டமிட்டபடியே இடமாற்றங்களைச் செய்ய முன்வருவீர்கள். தெய்வீகச் சிந்தனை அதிகரிக்கும். தொழிலை விரிவு செய்ய எடுத்த முயற்சிக்கு, வங்கிகளின் ஒத்துழைப்போடு, வள்ளல்களின் ஒத்துழைப்பும் கிடைக்கும். தனவரவு அதிகரிக்கப் புதிய பங்குதாரர்களை சேர்த்துக் கொள்வீர்கள். வெளிநாட்டில் உள்ள பிரபல நிறுவனங்களில் இருந்து அழைப்புகள் வரலாம். குலதெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். குடும்பப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும்.




**சனியின் வக்கிரமும், பெயர்ச்சிக் காலமும்**

25.5.2022 முதல் 9.10.2022 வரை மகரத்தில் சனி வக்கிரம் பெறுகின்றார். சனியின் வக்கிர காலத்தில் பொருளாதாரப் பற்றாக்குறை அதிகரிக்கும். வாங்கல் கொடுக்கல்களில் கவனம் தேவை. உடன்பிறப்புகள் பகையாகலாம். வழக்குகள் புதிதாகத் தோன்றும். 29.3.2023 இல் கும்ப இராசிக்கு சனி செல்கின்றார்.

இந்தப் பெயர்ச்சிக்குப் பிறகு சகாய ஸ்தானம் புனிதமடைவதால் இனிய பலன்கள் ஏராளமாக நடைபெறும். பணி புரியும் இடத்தில் பாராட்டும், புகழும் கூடும். வழக்குகள் சாதகமாக முடியும். வருங்கால நலன் கருதி தீட்டிய திட்டங்கள் வெற்றிபெறும். வாலில் மணிகட்டிய ஆஞ்சநேயரை வழிபடுவதன் மூலம் வளர்ச்சியில் ஏற்பட்ட தளர்ச்சி அகலும்.

**வளர்ச்சி தரும் வழிபாடு**

சனிக்கிழமை தோறும் வெற்றிலை மாலை அணிவித்து அனுமன் வழிபாட்டை மேற்கொள்வதோடு, அனுமன் கவசமும் படித்தால் ஆனந்த வாழ்க்கை அமையும்.

**பெண்களுக்கான பலன்கள்**

இந்தப் புத்தாண்டில் குடும்ப முன்னேற்றம் திருப்தி தரும். வீட்டிற்குத் தேவையான அதிநவீனப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். நீண்டநாளாக இருந்து வந்த எண்ணங்கள் நிறைவேறும். நிச்சயித்தபடியே சுபகாரியங்கள் இல்லத்தில் நடந்தேறும். கணவன் - மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும்.

பிள்ளைகள் வழியில் சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகும். பணிபுரியும் பெண்களுக்கு கேட்ட சலுகைகள் கிடைக்கும். கூடுதல் சம்பளத்துடன் வேறு வேலை அமையலாம்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அம்புலிமாமா



## விசித்திர மருந்து

தனசேகரன் தங்க புரத்திலேயே பெரிய பணக்காரன். பணமிருந்தும் அவன் உடல் நலம் இல்லாதிருந்தான். எந்த வைத்தியராலும் அவனது நோயைக் குணப்படுத்த முடியவில்லை. அந்த நோய் என்ன என்று கூட அவர்களுக்குத் தெரியவில்லை.

இச்சமயத்தில் அவ்வூருக்கு பரமானந்தர் என்ற ஜோகி வந்தார். அவர் ஊருக்கு வெளியே தம் ஆச்சிரமத்தை அமைத்துக் கொண்டார். அவர் தம் சக்தியால் பல அதிசயங்களை நிகழ்த்துகிறார் என்றும் தீராத நோய்களை எல்லாம் தீர்த்து வைப்பார் என்றும் மக்கள் கூறலானார்கள். அது கேட்டு தனசேகரன் தன் மனைவியை உடன் கூட்டிக் கொண்டு அவரை தரிசிக்கச் சென்றான்.

அவன் பரமானந்தரிடம் தனக்கு ஏதோ ஒரு இனம் தெரியாத நோய் இருப்பதாகக் கூறவே அவர் புன்னகை புரிந்து "உனக்கு இந்த ஊரில் யாராவது விரோதிகள் இருக்கிறார்களா?" என்று கேட்டார்.

தனசேனரனும் "இந்த ஊரில் என் விரோதிகள் நிறைய இருக்கிறார்கள். அவர்களுக்கு என் பணத்தைக் கண்டு பொறாமை. அவர்களில் யாராவது பில்லி சூனியம் வைத்திருப்பார்கள் என்கிறீர்களா?" என்று கேட்டான். அப்போது அவனருகே இருந்த அவனது மனைவி "ஏன் இப்படி பிறரைப் பற்றி குறை கூறுகிறீர்கள்? உங்கள் சுபாவமே இதுதான்" என்றாள். பரமானந்தரோ "உன் கணவன் சொல்ல விரும்புவதை சொல்லட்டும்" எனவே தனசேகரனும் என் பக்கத்து வீட்டுக்காரர்களும் என் உறவினர்களும் என்னைக் காணவே வெறுக்கிறார்கள். இந்த ஊரிலேயே என் வீடு தான் பெரியது. ஆனால் நேற்று வந்த லட்சுமணன் என்ற வியாபாரி என் வீட்டை விட பெரிதாகக் கட்டி விட்டான். அதனால் தலைகால் தெரியாமல் துள்ளுகிறான். என் உறவினர்களோ நான் எப்போது இறப்பேன் என்றும் என் சொத்தை கவர்ந்து கொள்ளலாம் என்றும் காத்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் மீது பெருத்த இடி விழுந்து இவர்களெல்லாம் ஒரேயடியாக ஒளிந்து போனால் தான் என் மனம் நிம்மதியை அடையும்" என்றான்.

அப்போது பரமானந்தர் யோசித்து சில சிறு மருந்துப் பொட்டலங்களை அவனிடம் கொடுத்து "உனக்கு வந்துள்ள நோய் என்னவென்று தெரிந்து விட்டது. நீ தினமும் இந்த மருந்தை ஒரு பொட்டலம் வீதம் சாப்பிட்டு வா. மேலும் நீயும் உன் மனைவியும் கொஞ்ச நாட்கள் தீர்த்த யாத்திரை போய் வருங்கள். அப்போது உன் நோய் குணமடைந்து விடும் என்றான்.

தனசேகரனும் தன் மனைவியிடம் காசி, இராமேஸ்வரம் என்று பல ஊர்களுக்குச் சென்றான்.

(தொடரும்)

# கம்பராமாயணம்

## ஆரணிய காண்டம்




"தந்தையை நாட்டில் இழந்தேன்; மற்றொரு தந்தையைக் காட்டில் இழந்தேன். என்னைப் போல அபாக்கியவான் வேறு யாரும் இருக்க முடியாது".

"சீதைக்கும் உனக்கும் நேர்ந்த தீமைகளைத் தடுக்க முடியாத நான் உயிர் வாழ்ந்து என்ன பயன்? தவசிகளின் வேண்டுகோளை ஏற்று அரக்கரை அழிப்பதாக வாக்குறுதி அளித்தேன், அதனால் தான் வாழ்கிறேன். உன்னைக் கொன்ற பகைவன் உயிரோடு இருக்கிறான் என்று தெரிந்தும் போர் மேற்கொள்ளாமல் இங்கே மரம்போல் நிற்கிறேன்" என்று கூறிக் கதறினான்.

சடாயு இறக்கவில்லை; ஓரளவு உணர்ச்சி இருந்ததை அறிந்தான். சீதையை இராவணன் வலிதிற் கடத்திச் சென்றான் என்று சடாயு கூறினான்.

"மலரணிந்த வார் கூந்தலாளை இராவணன் மண்ணினோடும் எடுத்தான். ஏகுவானை எதிர்த்து நின்று ஆற்றல் கொண்டு தடுத்தனன்; என்ன செய்வது? சங்கரன் தந்த வாளால் என் சிறகுகளை வெட்டினான். இங்கு விழுந்து கிடக்கிறேன்; இது இங்கு நடந்தது" என்றான். இராமன் சினமும் சீற்றமும் கொண்டான். "சீதையைக் கடத்திய கொடுமையன் எங்கே சென்றான்?" என்று கேட்டான். அதற்கு அவனால் விடை கூற முடியவில்லை; அவன் மூச்சு அடங்கியது. "தம்பி! நம் தந்தைக்கு நாம் செய்ய வேண்டிய இறுதிக் கடன்களைச் செய்வோம்" என்றான்.

விறகுகள் கொண்டு வந்து தீ மூட்டி சடாயுவைக் கிடத்தி இராமன் எரியூட்டினான். மற்றும் ஈமச் சடங்குகள் அனைத்தும் செய்து முடித்தனர்.

அந்திப்பொழுது வந்து அணுகியது; இராமனும் இலக்குவனும் சடாயு உயிர் நீத்த இடத்தைவிட்டு நீங்கிச் செக்கர் வானம் நிறைந்த மேகம் தவழும் ஒரு மலையில் தங்கினர். இருள் மிகுந்தது; பிரிவு என்னும் துயர் இராமனை வாட்டியது.

மனைவியை மாற்றான் கொண்டு சென்றதால் ஏற்பட்ட மானமும், இராவணன் மீது கொண்ட சினமும், தந்தை போன்றவனாகிய சடாயுவின் மரணத்தால் ஏற்பட்ட துயரமும் இவர்களை வாட்டின; இவற்றை மெல்ல மறந்து வாழ வேண்டும் என்ற ஞானமும், தாங்க முடியாத துயரும் மனப் போராட்டமாக உருக்கொண்டன; இரவுப் பொழுதெல்லாம் தூங்காது பலவாறாக எண்ணித் துயருற்றனர்.

இளைய வீரனான இலக்குவன் இராமனிடம் அடக்கமாக "பொன் போன்ற சீதையைத் தேடாமல் ஈண்டு இருத்தல் தகுதியோ" என்று கேட்டான். புகழ்மிக்க இராமனும், அரக்கன் இருக்கும் இடம் துருவி அறிவோம் என்று கூறி மலைத் தொடரில் வெய்யில் மிகுந்த காட்டுக்குள் தேடிச் சென்றான்.

குன்றுகளையும் ஆறுகளையும் கடந்து பதினெட்டு யோசனை தூரம் நடந்து சென்றனர். பறவைகள் தங்குகின்ற குளர்ச்சி மிக்க சோலை ஒன்றில் புகுந்தனர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவுடையவர்கள் பெரும்பாலும் அந்த அறிவை ஏழைகளை நசுக்குவதிலும் கொள்ளையிடுவதிலும் உபயோகப்படுத்துகிறார்கள்!

~ பாரதியார்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கற்றவர் கயவராக இருந்தால் இந்த மண் தாங்காது!

. தவத்திரு குன்றக்குடி அடிகளார் மிகச் சிறந்த ஞானி, பேரறிஞர். அவரின் ஆழ்ந்த கன்ற பேச்சு தமிழ் மக்களை ஆற்றுப்படுத்தியது.

தூய சிந்தனை கொண்ட தவத்திரு குன்றக்குடி அடிகளார் ஒரு முறை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் உரையாற்றினார்.

அவர் ஆற்றிய உரையில் கற்றவர்கள் கயவர்களாக இருந்தால், இந்த மண் தாங்காது என்று கூறியிருந்தார்.

அடிகளாரின் மேற்போந்த உரை ஈழம் முழுவதிலும் பேசுபடுபொருளாயிற்று. எங்கும் அதுபற்றிய வாதங்கள் நடந்தாயின.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் ஏன்? அவ்விதம் கூறினார் என்ற கேள்வி ஆத்ம ஞானத் தேடலில் ஈடுபட்டவர்களைத் துளைத்துக் கொண்டே இருந்தது.

கற்றவர்கள் கயவர்களாக இருந்தால், அவர்களால் சாமானிய மக்களை சுலபமாக ஏமாற்ற முடியும்.

ஏழை மக்களை வாட்டி தங்களின் பொருளாதாரத்தை பெருக்க முடியும். எல்லாவற்றுக்கும் மேலாக பொதுமக்களின் இழப்புகளை தங்களின் இருப்புக்கான மூலதனமாக மாற்ற முடியும். இதையும் கடந்து ஏழைகளைப் பலிக்கடாவாக்கி தங்களை பிரமுகர்களாக ஆக்க முடியும்.

இந்த அடிப்படையிலேயே தீர்க்கதரிசனத்தோடு தவத்திரு குன்றக்குடி அடிகளார் கூறி வைத்தார் என்பதை இப்போது உணர முடிகிறது.

ஆம், கற்றவர்கள் கயவர்களாகிவிட்டால் யார்தான் என்ன செய்ய முடியும்.

அன்புக்குரியவர்களே! தங்கள் பிள்ளைகளை இழந்து சதா கண்ணீர் விடுகின்ற அந்த மக்களின் அவலத்தைப் புரிந்து கொள்ளுங்கள்.

தமிழ் மண் விடுதலை பெற வேண்டும் என்பதற்காக தங்களை ஆகுதியாக்கிய எங்கள் பிள்ளைகளை நினைத்துப் பாருங்கள்.

உங்கள் ஆற்றல், நீங்கள் கற்றறிந்த நுட்பங்கள், திறன்கள் என அனைத்தையும் எங்கள் மக்களின் விடுதலைக்காக எங்கள் மக்களின் வாழ்வுக்காக அர்ப்பணியுங்கள்.

இதற்கு உடன்பாடில்லை எனில் அமைதியைக் கடைப்பிடியுங்கள். அதுவும் நீங்கள் செய்கின்ற அறம் என்று உணர்ந்து கொள்ளுங்கள்.

ஆம், இன்றைய காலசூழலில் கற்றறிந்தவர்கள் ஒன்றுகூடி நல்லதொரு தீர்மானத்தை எடுக்க வேண்டும்.

உங்கள் தீர்மானம் தென்பகுதியில் ஏற்பட்டுள்ள கள நிலைமையை எமக்கான சந்தர்ப்பமாக ஆக்க வேண்டும். எங்கள் இனம் வாழ்வதற்கு இது மிகவும் அவசியம்.

## நேரடியாக முடிவெடுத்து மக்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்க வேண்டும்

### பாராளுமன்ற உறுப்பினர் நாமல்

(கொழும்பு)

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுபவர்களுக்கு இடையூறு ஏற்படுத்தாமல், அவர்கள் ,என்ன கூறுகின்றார்கள் என்பதை கண்டறிய வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு நேற்று கருத்து தெரிவித்தபோது அவர் இதனை தெரிவித்தார்.

அரச தலைவரை வீட்டுக்குப் போகச் சொல்கிறார்களே, அப்போது பிரதமரும் வீட்டுக்குப் போக வேண்டுமா? இது இன்று வந்தவை அல்ல, ஜே.ஆரை கொன்று விடுவோம் என்று பலகையை அடித்தார்கள்.

இதற்கு குழப்பமடையாமல் அவர்கள் .ஏன் அப்படி கூறுகிறார்கள் என்பது தொடர்பில் கண்டறிய வேண்டும்.

தலைவலி இருப்பவருக்கு உடம்பு வலிக்கு மருந்து கொடுத்து சரிவராது. அரச தலைவராகலாம், பிரதமராகலாம், எதிர்க்கட்சித் தலைவராகலாம். நேரடியாக முடிவெடுக்க வேண்டும். நேரடியாக முடிவெடுத்து நாட்டு மக்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்க வேண்டும்.

அந்த பிரச்சினைகளை மூடி மறைப்பதில் எவ்வித பயனும் இல்லை.

மேலும் நோய்க்கு தேவையான சிகிச்சையை அளிப்பதை விடுத்து வேறு நோய்க்கு சிகிச்சை அளிப்பதில் பயனில்லை என்றார். (ம-7)

## தமிழகத்துக்கு அகதிகளாக சென்ற இருவர் மீது போதைப்பொருள் வழக்கு

(தனுஷ்கோடி)

யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் இருந்து தமிழகம் சென்ற இரு இளைஞர்கள் மீதும் இலங்கையில் போதைப் பொருள் கடத்தல் வழக்குகள் நிலுவையில் உள்ளமையால், அவர்களுக்கு எதிராக வழக்கு தொடர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தமிழக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குருநகர் பகுதியை சேர்ந்த இரு இளைஞர்கள் தமிழகம், தனுஷ்கோடியை அண்மித்த தொண்டி பகுதியில் நேற்றைய தினம் வியாழக்கிழமை அதிகாலை தமிழக கடலோர பாதுகாப்பு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

குறித்த இருவரும் இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக அகதிகளாக தமிழகத்திற்கு தஞ்சம் கோரி வந்ததாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிவித்துள்ளனர்.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளின் போது குறித்த இருவருக்கும் எதிராக இலங்கை நீதிமன்றில் போதைப் பொருள் கடத்தல் வழக்குகள் நிலுவையில் உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

அதனால் இருவரையும் அகதிகளாக ஏற்காமல் அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கைஎடுத்துள்ளதாக அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.(ம-7,33)

*(இது தொடர்பில் முன்னர் கிடைத்த செய்தி உள்ளே)*

## வேம்பிராயில் விபத்து இருவர் படுகாயம்

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வேம்பிராய் பகுதியில் நேற்று வியாழக்கிழமை பிற்பகல் இடம்பெற்ற வீதி விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

குறுக்கு வீதி ஊடாக வந்த மோட்டார் சைக்கிள் புத்தூர் வீதி ஊடாக பயணித்த டிப்பர் வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு இளைஞர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

இதில் சாவகச்சேரி வடக்கு பகுதியைச் சேர்ந்த 29 வயதான இளைஞன் கால் முறிந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டதுடன், மேலும் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். (ம-7,30)

## கொரோனா தொற்று; 29 பேர் அடையாளம்

கொரோனாத் தொற்று உறுதியான 29 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 663,272ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் 682 பேர் சிகிச்சை நிலையங்களில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ம-7)

## மண்டைதீவில் பாரிய கடல்பாசித் திட்டம்

### இந்திய முதலீட்டாளர்களுடன் அமைச்சர் டக்ளஸ் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மண்டைதீவுப் பகுதியில் அடையாளப்படுத்தப்பட்ட இடங்களில் நவீன தொழில்நுட்பத்துடன் கடல்பாசி செய்கையை மேற்கொள்வது தொடர்பான கலந்துரையாடல் நேற்று இந்திய தனியார் முதலீட்டாளர்களுக்கும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ்தேவானந்தாவிற்கும் இடையில் நடைபெற்றது.

இதன்போது இந்தியாவில் இருந்து கிடைக்கும் காலத்தின் தேவை உணர்ந்த ஒத்துழைப்புக்களை நினைவுபடுத்திய அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில், பொருளாதார சவால்களில் இருந்து மீள்வதற்கு அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நடவடிக்கைகளுக்கு இந்தியா பல்வேறு ஒத்துழைப்புக்களை வழங்கி வருகின்றது.

இந்நிலையில், இலங்கையில் காணப்படுகின்ற வளங்களை இனங்கண்டு நவீன தொழில்நுட்ப முறைகளை பயன்படுத்தி விருத்தி செய்வதன் மூலம் நிலையான பொருளாதார நன்மைகளை உருவாக்குவதற்கு இந்திய தனியார் முதலீட்டாளர்கள் முன்வந்திருப்பது மகிழ்ச்சியளிக்கின்றது.

அந்தவகையில், மண்டைதீவு உட்பட வடக்கு மாகாணத்தில் பொருத்தமான இடங்களை அடையாளம் கண்டு கடல்பாசி செய்கையை மேற்கொள்வதற்கு தேவையான அனைத்து ஒத்துழைப்புக்களையும் கடற்றொழில் அமைச்சு வழங்கும் என்று தெரிவித்தார். (ம-7,33)

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### வடிவமும் வடிவமில்லாமையும்

வடிவம்,வடிவமில்லாமை இரண்டும் சேர்ந்த கூட்டுதான் வாழ்க்கை.உணர்ச்சிகளுக்கு வடிவமில்லை; ஆனால், அதன் வெளிப்பாடுகளுக்கு வடிவமுண்டு.ஆன்மாவிற்கு வடிவமில்லை;ஆனால் ,அதன் இருப்பிடத்துக்கு வடிவமுண்டு.

இதைப்போன்று, இறைவனின் அருளிற்கும் விவேகத்திற்கும் வடிவமில்லை.ஆனால் அவை வடிவங்கள் மூலமாகவே வெளிப்படுகின்றன.

வடிவமில்லாமையை நீக்கிவிட்டால் நீங்கள் செயலற்ற ஜடம்,லோகாதயவாதி,சித்தப்பிரமை பிடித்தவர் போல் ஆகிவிடுவீர்கள் .

வடிவை நீக்கிவிட்டால் நீங்கள் ஒரு தன்னை [illegible] தத்துவத்தில் [illegible] உணர்ச்சிவயப்பட்டு, மனம் சிதைந்தவர் ஆகிவிடுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

கட்டையில் கனல் மறைந்திருக்கின்றது. "விறகிற்தீயினன்" என்கிறார் அப்பர் பெருமான்.கட்டையைக் கடைந்தவுடன் , அதில் மறைந்த கனல் வெளிப்பட்டுக் கட்டை கனலாகக் காட்சியளிப்பது போல் , உயிரில் ஒளிந்திருக் கின்ற இறைவனை ஞானத்தால் கடைவோமா யின் சிவம் வெளிப்பட்டுச் சீவனைச் சிவமாக்கிக் கொள்ளுகிறது.



# கலப்பு தேர்தல் முறையில் மாகாண சபைத் தேர்தலுக்கான எல்லை நிர்ணய அறிக்கை-ஒரு பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 53

அட்டவணை 2.4: சமயங்களுக்கு அமைய சனத்தொகை சதவீத வேறுபாடு

வடமேல் மாகாணம்

| பிரதேசம் | பௌத்தம் | இந்து | இஸ்லாம் | கத்தோலிக்கம் | வேறு |
|---|---|---|---|---|---|
| குருணாகல் | 88.5 | 0.9 | 7.3 | 2.7 | 0.6 |
| புத்தளம் | 43.3 | 3.8 | 19.7 | 31.5 | 1.7 |
| வடமேல் மாகாணம் | 74.0 | 1.8 | 11.3 | 11.9 | 1.0 |
| இலங்கை | 70.1 | 12.6 | 9.7 | 6.2 | 1.5 |

### வடமேல் மாகாணம் நிர்வாக, உள்ளூராட்சி மற்றும் தேர்தல் அதிகாரப் பிரதேசங்கள்

நிர்வாக மற்றும் உள்ளூராட்சிக்கு ஏற்புடைய வடமேல் மாகாணத்தின் கட்டமைப்பு அட்டவணை 2.5 இல் காட்டப்பட்டுள்ளது


அட்டவணை 2.5: நிர்வாக மற்றும் உள்ளூராட்சி கட்டமைப்பு – வடமேல் மாகாணம்

| பிரதேசம் | பிரதேச செயலாளர் பிரிவு | கிராம அலுவலர் பிரிவு | மாநகர சபை | நகர சபை | பிரதேச சபை |
|---|---|---|---|---|---|
| குருணாகல் | 30 | 1610 | 1 | 1 | 19 |
| புத்தளம் | 16 | 548 | - | 2 | 10 |
| வடமேல் மாகாணம் | 46 | 2158 | 1 | 3 | 29 |
| இலங்கை | 331 | 14,021 | 24 | 41 | 276 |

பதிவு செய்யப்பட்ட வாக்காளர் எண்ணிக்கை, வாக்கெடுப்பு பிரிவுகள் மற்றும் வாக்கெடுப்பு மாவட்டங்கள் என்பன 2017 ஆம் ஆண்டின் போது பின்வருமாறு காணப்பட்டது. அட்டவணை 2.6

அட்டவணை 2.6: தேர்தல்கள் அதிகாரப் பிரதேசம் –2017 - வட மேல் மாகாணம்

| பிரதேசம் | பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் | வாக்கெடுப்புப் பிரிவு | வாக்கெடுப்பு மாவட்டம் |
|---|---|---|---|
| குருணாகல் | 1,315,715 | 14 | 949 |
| புத்தளம் | 587,683 | 5 | 387 |
| வடமேல் மாகாணம் | 1,903,398 | 19 | 1,336 |
| இலங்கை | 15,760,867 | 160 | 12,521 |




### குருநாகல் மாவட்டம் பற்றிய தகவல்கள்

குருநாகல் மாவட்டம் வட அகலாங்கு 7°15' மற்றும் 8°11' இற்கும், கிழக்கு நெட்டாங்கு 79° 53' மற்றும் 80°34' இற்குமிடையில் 4,816 சதுர கிலோ மீற்றர் கொண்ட நிலப்பரப்பில் அமையப் பெற்றுள்ளதோடு, வடமேல் மாகாணத்தின் மொத்தப்பரப்பில் 61.1 சதவீதமான பகுதி அதனுள் உள்ளடங்குகின்றது.

மாவட்டத்தின் தரைப்பகுதி மற்றும் உள்ளக நீர் உள்ளடக்கப் பகுதி என்பன முறையே.4,624 சதுர கிலோ மீற்றர் மற்றும் 192 சதுர கிலோ மீற்றர் ஆகும். உள்ளக நீர் உள்ளடக்கப்பகுதி முழு மாவட்டத்தின் மொத்தப்பரப்பில் 4 சத வீதமாகும்.

இம் மாவட்டம் வடக்கே அநுராதபுர மாவட்டத்தையும், தெற்கே கண்டி, கேகாலை மற்றும் கம்பஹா மாவட்டங்களையும், கிழக்கே அநுராதபுரம் மற்றும் மாத்தளை மாவட்டங்களையும், மேற்கே புத்தளம் மாவட்டத்தையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது.

2010 ஆம் ஆண்டில் 217 சதுர கிலோ மீற்றர் அதாவது மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பில் 4.5 சதவீதமான பகுதி வனப்பிரதேசமாகக் (காடுகளாக) காணப்பட்டது.

இந்த மாவட்டம் கடல் மட்டத்திற்கு மேல் ஆகக் குறைந்தது 2 மீற்றர் தொடக்கம் உச்சமாக 1,220+ மீற்றர் வரையில் நில உயரம் மாறுபட்டு காணப்படுகின்றது.

**குருநாகல் மாவட்டம் 4,816 சதுர கிலோ மீற்றர் கொண்ட நிலப்பரப்பில் அமையப் பெற்றுள்ளதோடு, வடமேல் மாகாணத்தின் மொத்தப்பரப்பில் 61.1 சதவீதமான பகுதி அதனுள் உள்ளடங் குகின்றது. மாவட்டத்தின் தரைப்பகுதி மற்றும் உள்ளக நீர் உள்ளடக்கப்பகுதி என்பன முறையே 4,624 சதுர கிலோ மீற்றர் மற்றும் 192 சதுர கிலோ மீற்றர் ஆகும்.**

**இம் மாவட்டம் வடக்கே அநுராதபுர மாவட்டத்தையும், தெற்கே கண்டி, கேகாலை மற்றும் கம்பஹா மாவட்டங்களையும், கிழக்கே அநுராதபுரம் மற்றும் மாத்தளை மாவட்டங்களையும், மேற்கே புத்தளம் மாவட்டத்தையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. சனத்தொகை அடர்த்தி சதுர கிலோமீற்றருக்கு 350 நபர்களாகும்**

சனத்தொகை மற்றும் வீடுகளின் கணக்கெடுப்புக்கமைய (2012) மாவட்டத்தின் மொத்த சனத்தொகை 1,618,465 என்பதோடு, சனத்தொகை அடர்த்தி சதுர கிலோமீற்றருக்கு 350 நபர்களாகும். 10 வயதிற்கு மேற்பட்ட சனத்தொகையின் எழுத்தறிவு 36.5 வீதமாகும்.

கொழும்பிலிருந்து 84 கிலோமீற்றர் நேரடித் தூரத்தில் அமையப் பெற்றுள்ள குருநாகல் நகரம் குருநாகல் மாவட்டத்தின் தலைநகரமாக இருப்பதோடு வடமேல் மாகாணத்தைப் போன்று குருநாகல் மாவட்டத்திலும் பிரதானமான ஒரு நகரமாகும்.

2576 கிலோமீற்றர் நீளம் கொண்ட வீதிகள் 2016 ஆம் ஆண்டில் குருநாகல் மாவட்டத்தில் காணப்பட்டன.

குருநாகல் நகரம் பெருந்தெருக்கள் மூலமாகவும் மற்றும் புகையிரதத்தினூடாகவும் நாட்டில் அமையப்பெற்றுள்ள அநுராதபுரம், மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கண்டி, மன்னார், புத்தளம் மற்றும் திருகோணமலை ஆகிய நகரங்களுக்கு பிரயாணிக்கும் போது கடந்து செல்ல வேண்டிய ஒரு நகரமாகும்.

குருநாகல் மாவட்டத்தின் வேலை வாய்ப்பு முக்கியமாக சேவைத் துறையில் (40%) அதைத் தொடர்ந்து விவசாயத் துறையில் (30%) மற்றும் கைத்தொழிற்றுறையில் (29%) ஆகும்.

### குருநாகல் மாவட்டம் இன மற்றும் சமய அடிப்படையில் சனத்தொகை வேறுபாடு - 2012

சனத்தொகை இனப்பிரிவு மற்றும் சமயங்களுக்கமைய வேறுபட்டுள்ள விதம் அட்டவணை (P1) இல் காட்டப்பட்டுள்ளது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதுக்காட்டில்...

கல் இடம்பெற்றுள்ளது.

புதுக்காட்டுச்சந்தியில் இருந்து மருதங்கேணி நோக்கி சென்ற மோட்டார் சைக்கிள் மருதங்கேணியில் இருந்து புதுக்காடு நோக்கி வந்து கொண்டிருந்த கப்ரக வாகனம் மோதியுள்ளது.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த உடுத்துறை வடக்கு தாளையடியை சேர்ந்த நாகேந்திரன் ஜெகன் என்பவரே பலியாகியுள்ளார்.

விபத்துத் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம -7,100,316)

## நகரங்களுக்கு...

அன்றாடம் 60,000 தொடக்கம் 80,000 வரை விநியோகிக்கப்பட்ட சமையல் எரிவாயுவை 30 ஆயிரமாக குறைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் முழுமையான சமையல் எரிவாயு தேவையை பூர்த்தி செய்வதாயின் மாதாந்தம் 30 மில்லியன் டொலர் தேவை என்றும் தற்போதைய நிலையின் கீழ், இதற்காக செலவு செய்ய முடியாதிருப்பதுடன் நாட்டை கட்டியெழுப்ப அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என கூறியுள்ளார்.

எனவே விறகு உள்ளிட்ட ஏனைய எரிபொருளை பயன்படுத்தக்கூடிய சகலரும் மீண்டும் பழைய முறைக்கே செல்வது அவசியம் என்றும் இதுவே நாட்டுக்காக செய்யக்கூடிய பெரிய அர்ப்பணிப்பு என்றும் தெரிவித்துள்ளார். (ம-7)

## மருத்துவப்...

சியா இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

குறித்த மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ள நிலையில் சுகாதார அமைச்சர் கலாநிதி சன்ன ஜயசுமண அவற்றை பெற்றுக்கொண்டுள்ளார். (ம-7)

மெகா பவர்
திகதி 28/04/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1094
O 05 06 14 50 75

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2022.04.28
சீட்டிழுப்பு இலக்கம் 055
சிம்மம் 06 25 27 53 சிம்மம்

மஹஜன சம்பத
திகதி 2022/04/28
சீட்டிழுப்பு இலக்கம் 4746
L 0 3 8 7 5 7

தன நிதானய
திகதி -2022.04.28
சீட்டிழுப்பு இலக்கம் - 776
Z 31 33 43 62

## வரிசையில்...

மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் களுத்துறை தெற்கு, மஹா ஹீனடியங்கல பகுதியைச் சேர்ந்த 63 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவர் நேற்று காலை 7 மணியளவில் மண்ணெண்ணெய் கொள்வனவு செய்வதற்காக இவ்வாறு வரிசையில் நின்றுள்ளார்.

நேற்று மதியம் 1 மணியளவில் குறித்த நபர் மயங்கி விழுந்துள்ள நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், வைத்தியசாலையில் அவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

## அனைத்து...

யமைச்சர் அலி சப்ரி வாக்குறுதியளித்துள்ளார்.

மின்சாரம், எரிவாயு உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகளை வழங்குவதில் ஏற்பட்டுள்ள நெருக்கடி ஒரு மாதத்திற்குள் தீர்க்கப்படும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

பாராளுமன்ற வளாகத்தில் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று முற்பகல் நடைபெற்ற கட்சித் தலைமைக் கூட்டத்தின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர மற்றும் வர்த்தக மற்றும் சமுர்த்தி அமைச்சர் ஷெஹான் சேமசிங்க ஆகியோரும் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டனர்.

பொருளாதார நெருக்கடிக்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் கட்சித் தலைவர்கள் முன்மொழிந்தனர். அரசியல் ஸ்திரத்தன்மையை விரைவாக ஏற்படுத்துவது தொடர்பிலும் கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது. (ம-7)

## நாடு...

ஜனாதிபதி உட்பட முழு அரசாங்கமும் பதவி விலக வேண்டும் என்பதை வலியுறுத்தி ஆசிரியர் சங்கம், சுகாதார சேவை சங்கம், துறைமுக சங்கம், அபிவிருத்தி அதிகாரிகள் சங்கம், சுகாதார சேவை சங்கம், வைத்திய ஆய்வுகூட நிபுணர் சங்கம், மின்சாரம், புகையிரதம், பெற்றோலியம், தபால் மற்றும் தோட்டத் தொழிற்துறை சங்கம் உள்ளிட்ட ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிற்சங்கத்தினர் நேற்று அடையாள பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டதால் நாடு முற்றாக முடங்கியது.

இந்நிலையில், போக்குவரத்துக்கள் ஸ்தம்பிதமடைந்த நிலையில், நாட்டின் பல நகரங்கள் மக்கள் நடமாட்டமற்று வெறிச்சோடிக் காணப்பட்டன. அத்துடன் மக்களின் அன்றாடச் செயற்பாடுகள் பாதிப்படைந்தன. பெரும்பாலான பாடசாலை செயற்பாடுகள் முடங்கின. இதேவேளை, நாடளாவிய ரீதியில் தொழிற்சங்க ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றதால் போக்குவரத்து பாதிப்படைந்தது.

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திலிருந்து ரயில் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இடம்பெற்றன. போக்குவரத்து சேவைகள் ஸ்தம்பிதமடைந்த நிலையில் காணப்பட்டன. அத்துடன் பாடசாலை செயற்பாடுகள் முடங்கிய நிலையில், ஒரு சில பாடசாலை செயற்பாடுகள் இடம்பெற்றன.

வவுனியாவிலும் தொழிற்சங்க போராட்டம் காரணமாக மக்களின் அன்றாட செயற்பாடுகள் பாதிக்கப்பட்டன. வவுனியா நகரத்தின் பல கடைகள் மூடப்பட்ட நிலையில் வவுனியா நகரத்தில் மக்களின் நடமாட்டங்கள் இல்லாமையால் நகரம் வெறிச்சோடிக் காணப்பட்டது. பல பாடசாலைகள் மூடப்பட்டு கல்விச் செயற்பாடுகள் ஸ்தம்பிதமடைந்தன.

ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தை பதவி விலகக்கோரி பல தொழிற்சங்கங்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டமையால் யாழ்ப்பாண நகரில் பொதுமக்களின் அன்றாட செயற்பாடுகள் பாதிக்கப்பட்டன.

அதனால் யாழ்ப்பாண குடாநாட்டின் இயல்பு நிலை முற்றாக செயலிழந்து வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டு தனியார் மற்றும் அரச போக்குவரத்து சேவைகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இடம் பெற்றது.

பாடசாலைகள் மற்றும் வங்கி சேவைகள் பாதிக்கப்பட்டதோடு புகையிரத சேவை, தபால் சேவைகள் என்பன முற்றாக செயலிழந்தன. அத்தோடு யாழ்ப்பாண நகரத்தின் வீதிகளில் பொது மக்களின் நடமாட்டம் குறைவாக காணப்பட்டதோடு யாழ்ப்பாண நகரில் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டன.

மலையகத்தின் பல நகரங்கள் மக்கள் நடமாட்டமற்று போக்குவரத்துக்கள் ஸ்தம்பிதமடைந்த நிலையில் வெறிச்சோடிக் காணப்பட்டன.

குறிப்பாக ஹட்டன் நகரத்தில் எவ்வித போக்குவரத்துக்களோ அல்லது கடைகளோ திறக்கப்படாத நிலையில் மக்கள் நடமாட்டமற்ற நிலையில் காணப்பட்டது. அத்துடன் ஹட்டன் ரயில் நிலையத்தில் இருந்து எவ்வித ரயில்சேவைகளும் இயக்கப்படவில்லை. இதனால் மக்களின் அன்றாட செயற்பாடுகள் பாதிக்கப்பட்டன. (ம-7)

## ராஜ...

ஜனாதிபதி தேர்தலின் போது தேசிய பாதுகாப்பையும் திருடர்களை பிடிக்கும் பொறுப்பை ஃபீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவிற்கு வழங்குவதாகக் குறிப்பிட்ட தமது கருத்தில் தற்போதும் மாற்றமில்லை என அவர் சுட்டிக்காட்டினார்.

30 மாதங்களாக நாட்டைக் கொள்ளையடித்து, நாட்டிலுள்ள வடமாகாண சொத்துக்களை ஒரு நாட்டிற்கும் தென் மாகாண சொத்துக்களை ஒரு நாட்டிற்கும் கிழக்கு மாகாண சொத்துக்களை வேறொரு நாட்டிற்கும் விற்றுள்ள திருடர்களுடன் இடைக்கால அரசாங்கத்தை அமைக்கப் போவதில்லை எனவும் சஜித் பிரேமதாச குறிப்பிட்டார். (ம-7)

## பொலிஸ்...

ரம்புக்கனையில் அண்மையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது துப்பாக்கி பிரயோகம் நடத்த அனுமதி வழங்கியமைக்காக இவர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவத்தின்போது துப்பாக்கிச் சூடு நடத்துமாறு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் உத்தரவிடும் காணொளியொன்று சிங்கள ஊடகமொன்றின் கமராவில் பதிவாகியுள்ளதாக செய்திகள் வெளியாகியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

மேலும், துப்பாக்கி பிரயோகம் நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் மேலும் 3 பொலிஸ் அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் இதனைத் தெரிவித்துள்ளது. (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

அத கோடிபதி
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1549
வர்ணம்: கடும் நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2022.04.28
ரூ. 3,061,300/-
10 17 23 44 N

சனிதா
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.04.28
சீட்டிழுப்பு இல: 3884
வர்ணம்: சிவப்பு
ரூ. 2,913,120/-
27 49 54 64 E

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1723
சீட்டிழுப்பு திகதி 2022/04/28
நிறம் பச்சை
தினம் வியாழன்
Y 13 15 27 41
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 58,923,827/-

සංවර්ධන වාසනාව
திகதி : 2022-04-28
வெற்றி வாரம் : 504 | வர்ணம் : சிவப்பு
சுப்பர் ஜக்பொட் ரூ.10,906,180/-
Y 03 17 20 4
ரூ.1,618,220/-
ரூ.10,985,708/-

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,398,421/-
திகதி 2022 / 04 / 28
வெற்றி வாரம் 3435
வர்ணம் கபிலம்
வெற்றி இலக்கங்கள் 03 19 41 45 சிம்மம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 7,641,660/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
C 18 44 50 64 67
சீட்டிழுப்பு வாரம் 899
செம்மஞ்சள்
2022.04.28 வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 233,631,787/-
011-2 333 546-47
Web : www.dlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**NORTH LANKA IIT CITY CAMPUS**

UCEM

APPROVED CENTER OF CENTRAL AMERICAN BUSINESS UNIVERSITY - COSTA RICA

APPROVED BY UGC AND UNESCO

பின்வரும் கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**B.Ed - 3 Years**

தகைமை: A/L 3 Passes

**B.Ed [ Top Up] 1 Year**

தகைமை: Training College / College of Education பூர்த்தி செய்த ஆசிரியர்கள்

**M.Ed - 1 Year**

தகைமை: B.Ed / PGDE

மேற்படி கற்கைநெறிகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன. கற்கைநெறியை தொடர விரும்புவோர் உடனடியாக பதிவு செய்து பங்குகொள்ளவும்.

தொடர்புகளுக்கு : North lanka IIT City Campus, Top Floor, People's Bank Building, Stanley Road, Jaffna.
T.P - 0767504535 / 0778849677 / 0765688156

(C-4256)



**LIVE IN CANADA**

இலவச கருத்தரங்கு

கனடாவில் வேலைவாய்ப்புகள், நிரந்தர வதிவிடம், உயர்கல்வி வழிமுறைகளும் ஆலோசனைகளும்

01-05-2022 ஞாயிறு காலை - 11 மணி

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A.சப்பல் லேன். யாழ்ப்பாணம்.

முற்பதிவு அவசியம் 0777-068-777

(C-4249)



10வருட வெற்றிகரமான சேவையில். SEP/2022

UK அல்லது கனடாவில் உயர்கல்வி

குறைந்த கட்டணத்தில் இலகுவாக செல்லக்கூடிய நேர்வழி

எமது வீசா ஆலோசனை வாயிலாக UK, கனடா சென்ற மாணவர்களினை நேரில் வரும் சந்தர்ப்பத்தில் பார்வையிடமுடியும்

நேரில்வந்து சந்தித்து இலவச ஆலோசனைகளை அறிந்து கொண்டு பயன்பெற...

WORLD EDUCATION CONSULTANCY
0779265447 / 0217200989

(C-4250)


# 40 எம்.பிக்கள் ஜனாதிபதியை சந்திக்க தீர்மானம்

(கொழும்பு)

பாராளுமன்றில் சுயாதீனமாக செயற்பட தீர்மானித்த பாராளுமன்ற உறுப்பினர்கள் நாற்பது பேரும் இன்றைய தினம் ஜனாதிபதியுடனான சந்திப்பினை மேற்கொள்வதற்கு தீர்மானித்துள்ளதாக சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பு இன்று காலை 10 மணியளவில் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-7)


**தேவை**

எமது சிறுவர் இல்லத்திற்கு,

பராமரிப்பாளர் (பெண்)
உளவளத்துணையாளர் (பெண்)
முகாமையாளர்

தகுந்த சம்பளம் வழங்கப்படும்.(நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்)

உடன் தொடர்பு கொள்ளவும்!!!!!

பாரதி சிறுவர் அபிவிருத்தி நிலையம் (11197)

071 535 4500, 071 535 4501



**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கல்வியங்காடு புதிய செம்மணி வீதியில் ஆனந்தபுரம் பகுதியில் 20 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

- நிலப்பரப்பு
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- 14 அடி பாதையுடன்
- நல்ல தண்ணீர்ஊற்று சூழல்
- கல்வியங்காட்டு சந்தியில் இருந்து 2km தூரம்

பார்வையிடும் நேரம் : காலை 6 மணிமுதல் மாலை 6 மணி வரை

1 பரப்பின் விலை 750,000/=

ஜெயம் தரகர் தேவையில்லை

077 814 7389, 077 241 7589

(11194)



# நீங்கா நினைவுகளுடன்

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் **பாலசுப்பிரமணியம் கவிராஜ் (கவி)**

**மண்ணுலகில்:- 16.05.1994 விண்ணுலகில்:- 29.04.2019**





எம் கண்ணீரும் நிற்கவில்லை – கவியே!
கவலையும் ஆறவில்லை காற்றுடன் உன் ஆவி
கலந்து போய் காலம் தான் மூன்றாண்டு ஆனதுவோ!
கலங்கித் தவிக்கின்றோம் உன்னைக் காணாது
கண்ணீருடன் தேடுகின்றோம் கண்ணின் மணியே!

மென்மையான புன்சிரிப்பும் சாந்தமான முகமும்
சந்தனப்பொட்டும் சத்தமில்லா உன் பேச்சும்
சடுதியில் மறைந்ததுவோ! தாங்கிடுமோ எம் உள்ளம்
உன்னை விரும்பாதார் யாருண்டு இவ்வுலகில்
உள்ளம்தான் வேகுதையா உன் பிரிவு தாங்காது

அன்பான உறவுகளும் அயலவர் நண்பர்களும் இன்னும்
ஆறாது துடித்திடவே அவசரமாய் விதி முடித்து சென்றாயோ?
மத்திய கல்லூரித் தாய்கூட மறக்கவில்லையடா – உன் நினைவை

மூன்றாண்டு நினைவினிலே உன் ஆத்மா சாந்தி வேண்டி
வில்லூன்றிப் பெருமானை வேண்டுகின்றோம் – எங்கள்
விண்ணுலகத் தெய்வமே கவியே!

**சோலைபுரம், கொட்டடி,**
**யாழ்ப்பாணம்.** (11170)

தகவல்: குடும்பத்தினர்
077 386 8675

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.04.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.